Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . .

AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1 புத்தகம். 1	சௌமியஹு ஆவணி மீ 1உ 1909ஹு அகஸ்ட்டு மீ 16உ	Part. 5 பிரதி. 5

Contents

Rotation of Crops ...	65
A suggestion to ryots growing irrigated cholam or ragi by M. R. Ry. Rao Bahadur J. Dharma Ranga Raju Garu ...	70
Correspondence	73
The Agricultural College, Coimbatore by M. R. Ry. T. C. V. Ramana Aiyer Avl.—The Nilgiris. ...	74
Month's operations ...	77
News & Notes ...	80

பொருளடக்கம்

பயிர்மாற்றல்	65
இறவைச் சோளம் அல்லது கேழ்வரகு சாகுபடிசெய்பவர்களுக்கு ஒரு அறிக்கை ம-ா-ா-ஸ்ரீ ருவ்பஹதூர் ஜெ. தர்மரங்க ருஜு	70
கடிதம்.	73
கோயம்புத்தூர் வியவசாய காலேஜும் பண்ணையும் ம-ா-ா-ஸ்ரீ டி.ஸி.வி. ரமணஅய்யரவர்கள் நீலகிரி	74
ஆவணிமாதத்திய பருவங்கள்	77
சமாசாரக் குறிப்புகள் ..	80

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12
Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by
J. R. RANGA RAJU,
5, Mount Road, Madras

[*All Rights reserved*]

WORLD RENOWNED SINGERS SEWING MACHINES.

விவசாயக்காரர்களுக்கு முக்கிய அறிவிப்பு

வயல்களில் வேலையற்றிருக்கும்போது காலத்தை வீணாகக்கழிக்கவேண்டாம். உலகப்பிரசித்தியுள்ள எங்கள் தையல்மெஷின்களை வாங்கி காலத்தை நன்றாய்ப்போக்குங்கள். இலாபமுண்டு. மாதம்மாதம் கொஞ்சபணம் கட்டி வாங்கலாம். ரொம்ப சுலபம். மிகவும் உறுதியானது. நீடித்துநிற்கும். உபயோகிக்கும்விதம் கற்றுக்கொடுக்கிறோம். பழுதில்லாமல் பார்த்துக் கொள்ளுகிறோம். சகல சாமான், ஊசி, நூல், எப்போதும் தயாராயிருக்கும். விலை ஜாபிதாவுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சிங்கர் மானிபாக்சரிங் கம்பெனி

பிரதான ஆபீஸ்:—179, மவுண்ரோட் சென்னை. கிளையாபீஸ்கள்:— பெங்களூர், கோயமுத்தூர், குன்னூர், கடலூர், கடப்பை, ஹின்துபூர், கடேர், மதிராஸ்டவுன், மதுரை, மடிகரை, மைசூர், இராபர்ட்சன்பேட்டை, சேலம், ஹிமுகா, திருநெல்வேலி, திருவனந்தபுரம், வேலூர் முதலியன.

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரயமும் அச்சுக்கூலியும் தபால் சிலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்	ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	0	12	0
தனிப்பிரதி	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்கு தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்க ராஜு அண்டு பிரதர்ஸ்

5. மௌண்ட்ரோட், சென்னை.

எழுதி வி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம்.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. I } புத்தகம் I }
சௌமிய௵ ஆவணி௴ 1௳
1909௵ ஆகஸ்ட்௴ 16௳
{ No. 5 { பிரதி 5

பயிர்மாற்றல்

ROTATION OF CROPS

பயிர்மாற்றல் என்பது அயல் தேசங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டிய நூதனமுறையல்ல. அது இந்த தேசத்தில் அநேக இடங்களில் முன்னமே அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது, உதாரணமாக :—

பஞ்சாப்தேசம்

புன்செய்.—1-ம் ௵ நிலம் தரிசு, 2-ம்௵ கோதுமையும் கடலையும், 3-ம்௵ சோளநாற்று, 4-ம்௵ தரிசு, 5-ம்௵ தரிசு, 6-ம் ௵ மறுபடியும் கோதுமையும் கடலையும், 7-ம்௵ மறுபடியும் சோளநாற்று.

செழிப்பானநிலம்.—1-ம்௵ பருத்தி, 2-ம்௵ சாமை, 3-ம்௵ கரும்பு, 4-ம்௵ மக்காச்சோளம், 5-ம்௵ கோதுமை, 6-ம்௵ மறுபடியும் பருத்தி.

வடமேற்கு மாகாணங்கள்

(1)—1-ம்௵ அவுரி, 2-ம்௵ வாற்கோதுமையும் பயறும், 3-ம்௵ தரிசு, 4-ம்௵ கோதுமை, 5-ம்௵ மறுபடி அவுரி.

(2)—1-ம்௵ கம்பு, 2-ம்௵ பசுந்தாள் எருப்பயிர், 3-ம்௵ கோதுமை, 4-ம்௵ மறுபடி சாமை.

வங்காளம்

(1)—1-ம்ஷூ கம்பு, 2-ம்ஷூ நெல், 3-ம்ஷூ துவரை முதலிய காய்த்தானியங்களில் ஒன்று. 4-ம்ஷூ முதலடி சாமை, தாளடி எள்ளு அல்லது பயறு.

(2)—1-ம்ஷூ பருத்தி, 2-ம்ஷூ எள்ளு, 3-ம்ஷூ தினை.

மத்தியமாகணங்கள்

1-ம் வருஷம் சோளம், கம்பு, பயறு கலப்புப்பயிர். 2-ம் வருஷம் கோதுமை.

பம்பாய் இராஜதானி

(1)—1-ம் வருஷம் பருத்தி, 2-ம் வருஷம் கோதுமை அல்லது சோளம், 3-ம் வருஷம் கடலை அல்லது பயறு தினுகளில்ஒன்று.

(2)—1-2-ம் ஷூ வெற்றிலை கொடிக்கால், 3-ம்ஷூ இஞ்சி, 4-ம் கரும்பு, 5-ம்ஷூ வாழை, 6-ம்ஷூ நெல் அல்லது கேள்வரகு.

சென்னை இராஜதானி

கோயம்புத்தூர் ஜில்லா

புன்செய்.—முதலடி-சோளம் அல்லது எள்ளு, தாளடி-பருத்தி அல்லது காய்த்தானியங்களில் ஒன்று.

தோட்டக்கால்.—முதலடி-கேள்வரகு. தாளடி-புகையிலை, அடுத்த ஷூ முதலடி-சோளம்.

நன்செய்.—1-2-ம் வருஷங்களில் கரும்பு, 3-ம் ஷூ நெல்.

திருநெல்வேலி ஜில்லா.

(1)—முதலடி கம்பும் பயறும் கலப்பு, தாளடி-பருத்தி, மறுவருஷம் சோளநாற்று. (2) முதல் வருஷம் கொத்தமல்லி அல்லது கடலை, 2-ம்ஷூ பருத்தி.

தேன் ஆர்க்காடு ஜில்லா, சிதம்பரம் தாலூகா

1-ம் 2-ம் வருஷங்களில் நெல், 3-ம் வருஷம் கரும்பு.

திருக்கோவிலூர், கூடலூர் தாலூகாக்கள்

1-ம் வருஷம் சம்பாநெல், 2-ம் வருஷம் கரும்பு, 3-ம் வருஷம் 3-அல்லது 4-மாதம் தரிசு பின்பு நெல்.

கள்ளக்குரிச்சி தாலூகா

1-ம் வருஷம் கரும்பு, 2-ம் ஷூ முதலடி அவுரியும் கம்பும் கலப்புப்பயிர், தாளடி நெல், 3-ம் ஷூ கரும்பு.

மதுரை ஜில்லா

(1)—முதலடி கம்பு, தாளடி கொள்ளு அல்லது உளுந்து அல்லது கொத்தமல்லி.

(2)—முதல் ஷூ பருத்தி, 2-ம் ஷூ கம்பு அல்லது வரகு.

(3)—1-ம் வருஷம் சோளம், 2-ம் வருஷம் கொள்ளு அல்லது சாமை.

வட ஆர்க்காடு ஜில்லா

நன்செய்.—1-ம் வருஷம் நெல், 2 ம் வருஷம் கரும்பு, 3-ம் வருஷம் மறு படி நெல்.

புன்செய்.—1-ம் வருஷம் வரகு, 2-ம் வருஷம் கொள்ளு அல்லது மற்ற காய் தானியங்களில் ஒன்று.

இவ்விதமாக இத்தேசத்தில் பயிர்மாற்றல் ஆங்காங்கு செய்யப் பட்டுவருகிறது. அப்படிசெய்யும் எல்லா இடங்களிலும் ஒரேபயிர் தொடர்ச்சியாய் இரண்டு மூன்று வருஷங்களுக்கு சாகுபடிசெய்து அது சரியானபடி பலன் கொடுக்காமல்போன காரணத்துக்காகவே அதைவிட்டு வேறு ஒரு பயிரை ஒன்று இரண்டு வருஷங்களுக்கு சாகுபடி செய்கிறார்கள். மற்றப்படி, ஒரேபயிர் அநேக வருஷங் களுக்கு சரியான பலன் கொடுத்துக்கொண்டிருப்பதாக நமது கிரு ஷிகர் நினைத்தால் அதைவிட்டு வேறு ஒரு பயிரை சாகுபடி செய்ய வேண்டுமென்ற எண்ணமே அவர்களுக்குத் தோன்றுவதில்லை. திரு நெல்வேலி முதலான அநேக ஜில்லாக்களில் நன்செய் நிலங்களில் நெல்லையே வருஷா வருஷம் பயிர்செய்து வருகிறார்கள். நெல் பயிருக்கு அவர்கள் சரியானபடி எருவைக்கிறார்கள். இப்படி எரு விட்டும்கூட தற்காலத்தில் நன்செய் நிலங்களின் மாசூல் முன்னிலும் குறைந்துபோயிற்று என்று அநேகர்கவனித்திருக்கலாம். என்றாலும் இன்ன காரணத்தினால் இப்படி மாசூல் கம்மியாகிறதென்பதை அவர் கள் திட்டமாய் அறியவில்லை. சிலர் முன்னிலும் இப்போது மழை குறைந்துபோயிற்று அதனால் மாசூல் கம்மி என்கிறார்கள். மற்றும் சிலர் வேறுகாரணங்களுண்டு என்கிறார்கள். அநேக காரணங்களால் மாசூல் கம்மி நேரிடுவது வாஸ்தவம் என்றாலும், அக்காரணங்களில் பயிர் மாற்றாதிருத்தலும் ஒன்று என்பதை கிருஷிகர் நிச்சயமாய் நம் பவேண்டும். இதற்கு எத்தனையோ அத்தாக்ஷிகள் இருக்கின்றன. சில நிலங்களில் ஊறை என்னும் ஒருவிதநெல் மறு உண்டாகிப் பயி ரைக் கெடுத்துவிடுகிறது. இது மலைச்சாரல் பிரதேசங்களிலுள்ள கிரு ஷிகருக்கு அநுபவ பூர்வமாய்த்தெரிந்திருக்கும். சில நன்செய்நிலங்க ளில் எவ்வளவு எரு வைத்தபோதிலும் வருஷாவருஷம் 'சட்டிநோய்' உண்டாகின்றது. அந்த நோய் தாக்கின தாள்களில் கதிர் உண்டா வதே இல்லை. சில இடங்களில் 'செந்தாளை' உண்டாகிறது. இப்படி அநேகவிதமான நோய்கள் நமது நெல் பயிர்களைக் கெடுக்கின்றன. இதுவரையும் இந்தநோய்களை உடனே மாற்றக்கூடிய முறைகளை ஒருவரும் கண்டுபிடித்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பயிர் மாற்றுவதால் இவ்வியாதிகளை உண்டாக்கும் கிருமிகள் நசித்துப் போகின்றன என்பது திட்டமாய்த் தெரிந்திருக்கிறது.

அநேக ஊர்களில் நன்செயில் கரும்பு, வாழை, மஞ்சள், சே ம்பு, சிறுகிழங்கு முதலிய பயிர்களைச் சாகுபடிசெய்யலாம். எல்

லா நிலங்களிலும் கோடையில் தண்ணீர் பாயக்கூடிய ஜலாதாரங்கள் இல்லையென்று சிலர் சொல்வார்கள். தற்காலத்தில் கரும்பு சாகுபடிசெய்யும் இடங்களில் கோடைகாலத்தில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனித்தால் அவர்களுடைய ஆக்ஷேபணைகள் சமாதானமாகும். மற்ற இடங்களில் என்ன பருவங்கள் செய்கிறார்கள் என்பதை அறியாமலே அநேக கிருஷிகர் விர்த்தியடையாமலிருக்கிறார்கள்.

சில ஊர்களில் நன்செய் நிலங்களில் எக்காலத்திலும் தண்ணீர் வெள்ளக்காடாய்ப் போகும். அதனால் நெல்லைத்தவிர வேறு பயிர்கள் செய்யமுடியாது என்பார்கள். அப்படியிருக்கும் இடங்களைப் பற்றி நாம் இங்கு பேச வரவில்லை. எத்தனையோ ஆயிரம் எக்கர் நிலங்கள் மானுவாரிக் குளங்களால் பாசனமாய் வருகின்றன. அவைகளில் வருஷாவருஷம் தண்ணீர்த்தட்டு சம்பவிக்காமலிருப்பதுமில்லை. அவ்விடங்களில் நமது கிருஷிகர் நெல் சாகுபடிசெய்து தீயவிடுகிறார்களே யல்லாமல் வேறுபயிர் சாகுபடிசெய்வதில்லை. பயிர் மாற்றுதல் செய்யக்கூடும் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தால் நன்செய்களில் கூடுமானபோதெல்லாம் வேறுபயிர்களை சாகுபடிசெய்து அனுகூலம் அடைவார்கள்.

புன்செய் நிலங்களில் மேற்சொன்ன ஆக்ஷேபணைகள் யாதொன்றுமில்லை. மேலும், புன்செய் நிலங்களில் பயிர்மாற்றுதல் செய்யவேண்டியது அவசியமாகவும் ஏற்படுகிறது. புன்செய் நிலங்களை இரண்டு மூன்று வருஷங்களுக்கு தரிசு போட்டு வைப்பது என்? அவைகளை சில வருஷங்களுக்கு இராஜிநாமாக்கொடுத்து அப்பால் தற்காஸ்த்தில் ஜாரி பெறுவது என்? இவைகளே நிலத்திலுள்ள ஒரேவிதமான பயிருணவுகள் சரியான அளவுக்கு மேற்பட்டு செலவாகின்றன என்பதற்குப் போதுமான அத்தாக்ஷிகளா யிருக்கின்றன. இவ்வருஷம் ஒரு நிலத்தில் வாகு பயிரிட்டால் மறுவருஷம் அந்நிலத்தில் வாகு பயிரிடுவதில்லையே இது எதனால்? எள்ளு சாகுபடியிலும் நிலத்தை மாற்றிக்கொண்டிருக்கிறோ மல்லவா? இதனால் பயிர் மாற்ற வேண்டியது அவசியமென்று ஏற்படுகிறதல்லவா?

தென் ஆர்க்காடு ஜில்லாவில் மணிலாக்கொட்டை (நிலக்கடலை) சாகுபடியைக் கவனியுங்கள். ஏறக்குறைய அறுபது வருஷங்களுக்கு முன் பண்ருட்டியைச் சுற்றிலும் 3000 எக்கரிலும், விழுப்புரம் தாலூகாவில் 1000-எக்கரிலும் மணிலாக்கொட்டை சாகுபடிசெய்துவந்தார்கள். அதன்பின் ஐந்துவருஷங்களுக்குள் மணிலாக்கொட்டைசாகுபடியான விஸ்தீர்ணம் 8000 எக்கருக்கு அதிகமாயிற்று. 1870-ம் வருஷத்தில் 20,000-எக்கர் விஸ்தீர்ணத்தில் மணிலாக்கொட்டை பயிரிடப்பட்டது. இதற்குப்பின் பத்துவருஷ காலத்தில் அவ்விஸ்தீர்ணம் இரட்டிப்பாயிற்று. 1885-ம் வருஷத்தில் கிட்டத்தட்ட ஒரு லக்ஷம்

ஏக்கர் விஸ்தீர்ணத்தில் மணிலாக்கொட்டை பரவிவிட்டது. 1889-ம் வருஷம் வரையில் சுமார் 1,20,000 ஏக்கர் ஆச்சுது.

இவ்விதமாய் 40-வருஷகாலத்தில் தென் ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள குடிகள் தங்கள் கதிர் தானியப்பயிரைக் கைவிட்டு, மணிலாக்கொட்டையில்கிடைக்கும் இலாபத்தை உத்தேசித்து அதையே தங்கள் நிலங்களிலெல்லாம் சாகுபடிசெய்யத் தொடங்கினார்கள். இதனால் என்ன சம்பவித்தது? கதிர் தானியப்பயிர் சாகுபடியாய்வந்த நிலங்களில் நூதனமாய் சில வருஷங்களுக்கு மணிலாக்கொட்டை சாகுபடி செய்தபோதெல்லாம் நல்ல பலன் கிடைத்தது. அப்படி அநேக வருஷங்களுக்கு ஒரேநிலத்தில் இடைவிடாமல் மணிலாக்கொட்டையே சாகுபடிசெய்தபோது மாசூல்கம்மி நேரிட்டது. 1895-ம் வருஷத்தில் 1,85,000 ஏக்கரில் இந்தப்பயிர் சாகுபடியாய் வந்தது. அதற்கு முன் எவ்வளவு சீக்கிரத்தில் இந்தப்பயிர் சாகுபடி விஸ்தீர்ணம் அதிகப்பட்டதோ, அவ்வளவு சீக்கிரத்தில் 1890-ம் வருஷத்துக்குப் பின் அதிகப்படவில்லை. அக்காலத்தில்தான் கிருஷிகர் தங்களுக்கு மணிலாக்கொட்டை சாகுபடியில் முன்போல அதிகமான இலாபம் கிடைக்கவில்லை என்பதை நன்றாய் அறிந்தார்கள். 1896-ம் வருஷத்தில் கிருஷிகருக்கு இந்தப் பயிரில் நேரிட்ட நஷ்டத்திற்கோ அளவில்லை. ஆகையால் மறுவருஷம் சுமார் ஒருலக்ஷம் ஏக்கரில் மணிலாக்கொட்டை சாகுபடிசெய்யாமல் விட்டுவிட்டார்கள். அடுத்த வருஷத்தில் மணிலாக்கொட்டை சாகுபடி செய்யப்பட்ட விஸ்தீர்ணம் 52,000 ஏக்கர் ஆய்விட்டது. எங்கேபார்த்தாலும் மணிலாக்கொட்டைப் பயிருக்கு நோய் உண்டாகி மாசூல் அதிகமாய்க் குறைவுபட்டது. ஆகையால் கிருஷிகர் மணிலாக்கொட்டையைக் கைவிட்டு தானியப்பயிரை மறுபடி கைக்கொண்டார்கள்.

இரண்டு மூன்றுவருஷங் கழித்து பாரி கம்பெனிக்காரர் தங்களுடைய மணிலாக்கொட்டை வியாபாரம் முற்றிலும் நின்றுபோனதால், பெருமுயற்சிசெய்து மோரீஸ்தீவிலிருந்து நூதனமான மணிலாக்கொட்டைவித்து கொண்டுவந்து அநேக கிருஷிகருக்குக் கொடுத்து அதை சாகுபடிசெய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதற்குமுன் இரண்டு மூன்று வருஷங்களுக்கு தானியப்பயிர் செய்யப்பட்டிருந்ததால், அந்த நிலங்களில் மணிலாக்கொட்டை நல்ல மாசூல் கொடுத்தது. ஆகையால் மறுபடியும் மணிலாக்கொட்டை சாகுபடி விஸ்தீரணம் அதிகப்பட்டது. 1900-ம் வரு͠ஷத்தில் அது 1,33,000-ஏக்கர் ஆச்சுது. 1902-ம் வரு͠ஷத்துக்குள் சுமார் $3\frac{1}{2}$-லக்ஷம் ஏக்கரில் மணிலாக்கொட்டை பரவிவிட்டது. நிலம் க்ஷீணமடைந்து ஒரேவிதமான பயிருணவு செலவாய்க்கொண்டு வந்ததால், 1903-ம் வரு͠ஷத்தில் மாசூல் கம்மி மறுபடியும் நேரிட்டது. உடனே அதன் விஸ்தீரணமும் குறைய ஆரம்பித்தது. அநேக ஊர்களில் தற்காலத்

தில் அந்தப்பயிருக்கு போதுமான எருப்போட்டு வருகிறார்கள்; என்றாலும் மாசூல் கம்மிநேரிட்டுக்கொண்டே வருகிறது.

ஆகையால் இப்போது தொடர்ந்து ஐந்துவருஷங்களுக்கு கம்புப் பயிருடன் கலந்தாவது அல்லது தனிப்பயிராகவாவது மணிலாக் கொட்டை ஒரு நிலத்தில் சாகுபடிசெய்யப்பட்டிருந்தால், பின்பு இரண்டு வருஷங்களுக்கு அந்நிலத்தில் ஒரு தானியப்பயிர் சாகுபடி செய்து, அதன்பின் மறுபடி மணிலாக்கொட்டை சாகுபடிசெய்தால் தான் தக்க இலாபம் கிடைக்கும் என்பது தெரிந்து அநேகர் அப்படியே பயிர்மாற்றி வருகின்றனர்.

இது ஒரு ஜில்லாக் கிருஷிகரின் அநுபோகம். இவ்வநுபோகத்தை மற்றவர்கள் அறிந்து அதனால் பயனடைவார்கள் என்று நம்புகிறோம். பயிர்மாற்றுதல் செய்தால் தற்காலத்தில் செய்வதுபோல் இரண்டு மூன்று வருஷங்களுக்கு நிலங்களைத் தரிசுபோடவேண்டிய அவசியமில்லை. நிலங்களை இராஜினமாக் கொடுக்கவேண்டிய அவசியமுமில்லை.

பயிர்மாற்றுவதில் நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவென்றால் ஒன்று இரண்டு வருஷங்களுக்கு பிரகாசதாமிலமும் நைட்ரோஜன்சத்தும் அதிகமாய் வேண்டிய கதிர் தானியப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டிருந்தால், அடுத்தவருஷம் சுண்ணும்புசத்து அதிகமாய் வேண்டிய காய்த்தானியம்பயிர் செய்யலாம். பின் ஒரு வருஷத்துக்கு தைலசத்துள்ள எள்ளு பயிரிடலாம். ஒருவருஷம் கரியாமில சத்து அதிகமாக வேண்டிய பருத்தி பயிரிடலாம். மறுவருஷம் திரும்பவும் கதிர்த்தானியம் பயிரிடலாம். இன்னின்ன பயிர்கள் இன்ன பயிருணவுப் பொருட்களை அதிகமாய் நிலத்தில் நஷ்டப்படுத்துகின்றனவென்பதையும், இன்னின்ன நிலங்களுக்கு இன்னவிதமான பயிர்மாற்றல் அநுகூலப்படும் என்பதையும் திருச்சினாப்பள்ளி விவசாய டிப்டி டைரெக்டரவர்களுக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம். அவர்கள் அந்தந்த மண்ணிலுள்ள பயிருணவுப்பொருள்களை இரசாயனப் பரீட்சைசெய்து அதற்குத்தக்க பயிர்மாற்றல் அட்டவணை குறிப்பிடுவார்கள்.

இறவைச்சோளம் அல்லது கேள்வரகு சாகுபடி செய்பவர்களுக்கு ஒரு அறிக்கை

A SUGGESTION TO RYOTS GROWING IRRIGATED CHOLUM OR RAGI

ஆடி ஆவணி, மாதங்களில், சரியான மழை பெய்கிற சில ஜில்லாக்களில் துவரையைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்கிறார்கள். அப்படி சரியான

மழைகள் பெய்யாத திருநெல்வேலி முதலான சில ஜில்லாக்களில் இறவைச் சோளம் அல்லது கேள்வரகுப் பயிருடன் கலப்புப்பயிராகத் துவரையை சாகுபடி செய்கிறார்கள். துவரை விதைப்பான இரண்டு மூன்று மாதங்களுக்கு அதிகமாக வளருவதில்லை. பின்னால் வளர்ந்து விரிந்து நிலத்தை மூடும். அதுவரையில் துவரைப்பயிருக்கு இடையிலுள்ள நிலம் யாதொரு பிரயோஜனமில்லாமல் இருக்கும். ஆகையால், அந்தக் காலிநிலத்தை உபயோகப்படுத்துவதற்காக துவரைப்பயிருக்கு இடையில் கேள்வரகாவது சோளமாவது சாகுபடிசெய்கிறார்கள். இந்தக்கதிர் தானியப் பயிர்களுக்குப் பாய்ச்சும் தண்ணீர் துவரை இளம்பயிராயிருக்கும்போது அதற்கும் உபயோகப்படும். இப்படி ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் இறவைத் தண்ணீரின் உதவியால் துவரை வளர்ந்துவருகிறது. அற்பசி மாதத்தில் கதிர்த்தானியப் பயிர் அறுவடையாகும். உடனே அறுவடையான இடத்தை உழுவார்கள். அதன்பின் மழைகாலமாதலால், மழையின் உதவியால் துவரை பூத்துக் காய்த்து தை, மாசி மாதங்களில் பலன்கொடுக்கும். உடனே மறுபடியும் நிலத்தை உழுது பருவம் செய்வார்கள். இப்படிச்செய்யும் கலப்புப்பயிரால் இரண்டுவகையான பிரயோஜனத்தை கிருஷிகர் அடைகிறார்கள். என்றாலும் துவரைமாசூல் அதிகமாகக் கிடைப்பதில்லை. அதிகமேன்மையான பயிராயிருந்தாலுங்கூட ஏக்கர் ஒன்றுக்கு துவரைமாசூல் 300 பக்காவுக்கு அதிகம் ஆவதில்லை. அதுவன்றி, மாசிமாதம் கடைசிவரையிலும் நிலம் காலியாவதுமில்லை. அடுத்த பயிருக்குச் செய்யும் பருவம் தாமதமாகிறது.

இப்படி இறவைச்சோளம் அல்லது கேள்வரகுப் பயிருடன் துவரையை விதைப்பதைவிட மணிலாக்கொட்டையை விதைத்தால் கிருஷிகர் அதிகப் பயன் அடையலாம். தானியப்பயிர் சாகுபடிசெய்து ஒருமாதமானவுடன் அந்தப்பயிரின் ஊடே களை வெட்டுவார்கள். சாகுபடி செய்யுமுன் நிலத்தை உழுது தக்கபடி எருவிட்டு ஆவணிமாதத்தில் கேள்வரகு நடவேண்டும்; புரட்டாசி மாதத்தில் பயிருக்கு ஊடே களைவெட்டும்போது, நிலத்தில் உண்டாகும் சிறு குழிகளில் மணிலாக்கொட்டை விதைகளைப்போட்டுமண்ணை மூடி, எப்போதும் பாய்ச்சுவதுபோல் தண்ணீர் பாய்ச்சவேண்டும். மணிலாக்கொட்டைப்பயிர் கேள்வரகுப் பயிருக்கு ஊடே முளைத்துப் படர்ந்துவரும். கேள்வரகு கார்த்திகைமாதத்திற்குமுன் அறுவடையாகும். தைமாதத்துக்குமுன் மணிலாக்கொட்டை மாசூல் எடுத்துக்கொள்ளலாம். உடனே நிலத்தை உழுது பருவம்செய்துமாசிப்பட்டத்தில் சோளம்விதைத்து வைகாசி மாதத்துக்குமுன் அறுவடைசெய்யலாம். மணிலாக்கொட்டை எடுப்பதற்காக நிலத்தை வெட்டிக்கொத்தவேண்டியதாயிருக்கும். அப்படி கொத்துவதானது அதிகச் செலவில்லாமல் அடுத்துச்செய்யும் தானியப்பயிருக்கு நிலத்தை நன்றாய்ப் பண்படுத்துவதுபோலாகும்.

இவ்விதமாய் கலப்புப்பயிராக இறவையில் மணிலாக்கொட்டை சாகுபடி செய்ததில் சிலவிடங்களில் ஏக்கர் ஒன்றுக்கு மாசூல் 2,000 இராத்தல் முதல் 3,000 இராத்தல்வரை கிடைத்திருக்கிறது. இதன்விலை ரூ 80-முதல் ரூ. 120 வரையாகும். தானியப்பயிரின் மாசூலும் கைக்குவருகிறது. மணிலாக்கொட்டைப் பயிருக்கென்று நிலம் பருவம் செய்யப்படுவதில்லையாகையால் அதற்கு விதையின்கிரையமும், விதைப்புக்கூலியும் அறுவடைசெலவும் தவிர வேறுசெலவு கிடையாது. நிலத்திலுள்ள பயிருணவுக்கும் அதிக நஷ்டமில்லை. பயிர் மாற்றலின் பிரயோஜனமும் உண்டாகிறது. இறவையில் பயிரிடும் கேள்வரகின் தாள் புன்செயில் பயிரிடும் கேள்வரகுத்தாளைப்போல் அவ்வளவு சத்துள்ளதல்ல. ஆகையால் கால்நடைகள்

அதைப் பிரியத்துடன் தின்கிறதில்லே. அத்துடன் மணிலாக்கொட்டைச சண்டும் கலந்துபோட்டால் கால்நடைகள் வெகு பிரியத்துடன் தின்னும். மணிலாக்கொட்டைப் பயிரின் இலேகள் காய்ந்து நிலத்தில் உதிர்ந்து மண்ணுடன் கலந்து அதற்கு கொழுமை உண்டாக்குகிறது. அடுத்தபயிருக்கு அது நல்ல உரமாகிறது.

தென் ஆர்க்காடு ஜில்லாவில் கிருஷிகர் புன்செய்களில் மாணவாரிப்பயிராக மணிலாக்கொட்டை சாகுபடிசெய்து அதிக இலாபம் அடைகிறார்கள் என்பதை உத்தேசித்து மற்ற ஜில்லாக்களில் அநேக இடங்களில் சில வருஷங்களாக அதை மழையின் உதவியால் பயிரிட முயன்றுவருகிறார்கள். தென் ஆர்க்காடு ஜில்லாவில் இது புன்செய்ப் பயிர்களில் முக்கியமானது. அந்த ஜில்லாவில் சாகுபடியாகும் மொத்த விஸ்தீர்ணத்தில் ($\frac{1}{5}$) ஐந்தில் ஒரு பாகத்தில் மணிலாக்கொட்டை சாகுபடியாகிறது. அதிகமாக திண்டிவனம், விழுப்புரம், திருக்கோவிலூர், கூடலூர் தாலூகாக்களிலுள்ள சாம்பல்நிறமான மணற்பாங்கு நிலங்களில் இது சாகுபடி செய்யப்படுகிறது. இப்போது வர வர கிருஷிகர் மணிலாக்கொட்டையை செம்மணல் நிலங்களிலும் பயிரிடத் தொடங்கிவிட்டார்கள். அந்த நிலங்களுக்குச் சரியானபடி எருவிடுகிறார்கள். முன்காலத்தில் நாலேந்து வருஷத்துக்கு ஒருமுறைவரகு அல்லது சாமை பயிராகி, மற்ற வருஷங்களில் தரிசாய்க்கிடந்து வந்த விருத்தாசலத்துக்கும் கேப்பர் மலேக்கும் இடையிலுள்ள தாழ்ந்த தரமான செவ்வல் மணல் புன்செய்களிலும் இப்போது மணிலாக்கொட்டை சாகுபடி செய்கிறார்கள்.

அதிலும் கொஞ்சம் மாசூல் அவர்களுக்குக் கிடைக்கிறது. என்றாலும், தென் ஆர்க்காடு ஜில்லாவில் எப்படி மழைகள் பெய்கின்றன என்பதை ஒருவரும் கவனிக்கிறதில்லே. மற்ற ஜில்லாக்களிலிருந்து அங்கு போய் மணிலாக்கொட்டைப் பயிரையும் அதில் கிடைக்கும் இலாபத்தையும் பார்த்து வாய் ஊறி "நம்மூரில் இதை என் பயிரிடக்கூடாது? அடுத்தவருஷமே பயிரிடவேண்டும்" என்று எண்ணி கொஞ்சம் விதையை உடனே வாங்கிக்கொண்டுபோய் விடுகிறார்களேயொழிய, தங்கள் ஊரின் மழையளவு எவ்வளவு என்று கவனிக்கிறதில்லே. அதைத் தென் ஆர்க்காடு ஜில்லாவின் மழையளவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதுமில்லே. தென் ஆர்க்காடு ஜில்லாவில் அநேக இடங்களில் ஜனவரிமீ முதல் மார்ச்சுமீ கடைசிவரையுள்ள வரண்டகாலத்தில் சுமார் 1-75-அங்குல மழையும், எப்ரில் மேமாதங்களாகிய கோடைகாலத்தில் சுமார் 2 அங்குல மழையும், ஜூன்மீ முதல் செப்டம்பர்மீ கடைசிவரையுள்ள சாறல்காலத்தில் சுமார் 15-அங்குல மழையும், அக்டோபர்மீ முதல் டிசம்பர்மீ முடியும் வரையுள்ள மழைகாலத்தில் சுமார் 30-அங்குல மழையும் பெய்கிறது. திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் முதலான ஜில்லாக்களில் அநேக பாகங்களில் வருஷம் முழுவதுக்கும் சராசரி 30-அங்குல மழைக்கு அதிகம் பெய்வதில்லே. அப்படி மொத்த அளவு மழை ஒருவேளே அதிகமாய் இருந்தாலுங்கூட மணிலாக்கொட்டைப் பயிருக்கு முக்கியமாய் மழையின் உதவி வேண்டிய காலங்களில் போதுமான அளவுக்கு மழைபெய்வது அரிது. ஆகையால் கிருஷிகர் மணிலாக்கொட்டைப் பயிரை எல்லா இடங்களிலும் மழையின் உதவியால் மட்டும் சாகுபடிசெய்து பயன்பெறலாம் என்னும் அபிப்பிராயத்தை ஒழித்துவிடவேண்டும்.

தண்ணீர் பாயக்கூடிய சாதனங்கள் அமையப்பெற்ற இடங்களில் மணிலாக்கொட்டையைத் தடையில்லாமல் சாகுபடிசெய்து இலாபம் அடைய

லாம். அப்படிச்செய்வதில் தனிப்பயிராய் சாகுபடி செய்வதைப்பார்க்கிலும் மேலே சொல்லியிருக்கும்விதமாய் ஒரு தானியப்பயிருடன் கலப்புப்பயிராய்ச் சாகுபடிசெய்தால் குறைந்தசெலவில் அதிகமான இலாபம் கிடைக்கக் கூடியதா யிருக்கிறது.

Jagannadha Bagh
Saidapet, 10-8-09.

J. DHARMARANGA RAJU.

கடிதம்

CORRESPONDENCE

கிருஷிகன் பத்திராதிப ரவர்களுக்கு,

ஐயா,

கோடம்பாக்கத்தைச் சேர்ந்த புலியூர் ஷ்ரோத்ரியம்தாரான என் தகப்பனார் கிருஷ்ணசாமி பிள்ளையவர்களுடைய நிலங்கள் அதிகக் காலமாகத் தருசாய்க் கிடந்ததால், அவைகளில் விழல் புல் முளைத்துப் பண்ணை பண்ணையாய் வளர்ந்திருந்தது. அந்த நிலத்தை சாதாரண கலப்பைகளால் உழக் கூடாமையால், அந்த விழல்வேர்களை அப்புறப்படுத்துவதற்கு என்ன செய்யலாமென்று என் தகப்பனாரவர்கள் அநேகருடன் யோசித்ததில் கடப்பாறை கொண்டு தோண்டி எடுத்தாலொழிய முடியாதென்று தீர்மானித்து அந்தப் படியே தோண்டுவதற்காகக் கடப்பாறைக் கம்பிகளை வாங்கி முனைசெய்து வைத்திருந்தது. அப்போது தாங்கள் வந்து பார்த்து அந்த நிலங்களை இரும்புக் கலப்பைகளில் சாதாரண எருதுகளைப்பூட்டி நன்றாய் உழுது புல்லைக் கிளப்பி விடலாமென்று சொன்னபிரகாரம், தாங்கள் அனுப்பிய (Sweedish Ploughs) இரும்புக் கலப்பைகளில் எங்கள் உழவுகாளைகளைப்பூட்டி உழுததில் தாங்கள் சொன்னபடியே திருத்தமாய் உழவாகி விழல் புல் எடுபட்டு நிலம் பண்பட்டிருக்கிறது. இது நடத்திப் பார்க்கும்வரை கலப்பைகளைக்கொண்டு இந்த வேலை செய்து முடிக்கக்கூடுமென்று நான் கொஞ்சமும் நினைக்கவே இல்லை. சுற்றுப் பக்கங்களிலுள்ள அநேக குடிகள் இதை வந்துபார்த்து ஆச்சரியப்பட்டார்கள். எருதுகளும் அதிக வருத்தப்படாமல் இந்தக் கலப்பைகளை இழுக்கின்றன.

அதன்பின் எங்கள் நிலங்கள் முழுமையுமே தங்களுடைய கலப்பைகளைக்கொண்டே இப்போது உழுது பருவப்படுத்தி யிருக்கிறோம். இவைகளைப்போல் இரண்டு மூன்று இரும்புக் கலப்பைகளை விலைக்குவாங்க உத்தேசித்திருக்கிறோம். இதைப்போன்ற விழல்நிறைந்த நிலங்களையுடைய அனேகர் நிலத்தை கடப்பாறைகொண்டு தோண்டியெடுப்பதற்கு அதிகப் பொருட்செலவுசெய்து நஷ்டப்படுவார்கள். அப்படி நஷ்டப்படாமல் எளிதில் கலப்பைகொண்டு உழுது முடிக்கக் கூடுமாகையால் எல்லாக் கிருஷிகருக்கும் தெரியும்படி இந்தக் கடிதத்தை தங்களுடைய பத்திரிகையில் பிரசுரஞ் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு:

கோடம்பாக்கம்,
18—7—09.

K. பொன்னுரங்கம் பிள்ளை.

கோயமுத்தூர் வியவசாயக் காலேஜூம் பண்ணையும்

THE AGRICULTURAL COLLEGE, COIMBATORE

சென்னைக்குச் சமீபத்தில் சைதாபேட்டையிலிருந்த இந்த காலேஜை கோயமுத்தூருக்கு மாற்றவேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்து 1906-ம் வருஷம் செப்டெம்பர்மீ 24உ அஸ்திவாரக்கல் நாட்டினார்கள். இந்த காலேஜ் கட்டிடத்திற்குமட்டும் ரூபாய் 4,47,000 செலவாயிருக்கிறது. சோதனைப்பண்ணைக்காக இக்கட்டிடத்தையடுத்து நஞ்சைப்பயிர்கள் விளையத்தக்கதும், தண்ணீர் இறைத்துத் தோட்டப்பயிர்கள் விளைவிக்கக்கூடியதும், மழையடித்து பயிராக்கக்கூடியதுமான பூமிகள் 457½-ஏகரா வாங்கப்பட்டிருக்கிறது. காலேஜூம், சோதனைப்பண்ணையும், உபாத்தியாயர்களும் மற்ற சிப்பந்திகளும் வசிக்கக் கட்டடங்களும், மாணுக்கர்கள் வசிக்கத் தகுந்த கட்டடங்களும் சேர்ந்து செலவு எட்டுலக்ஷத்திற்கு அதிகமாகிறதென்று தெரியவருகிறது. இன்னும் முழுவேலையும் முடிவதற்குள் செலவு பத்து லக்ஷமாகலாம். இவ்வளவு பெருந்தொகை செலவழித்து வியவசாயத்தொழில் முறைகளை இந்து வியவசாயிகளுக்கு கற்பிக்கவேண்டுமோ? என்று பலர் கேட்கலாம். இந்துக்கள் இன்று நேற்று வியவசாயத்தொழிலில் பிரவேசித்தவர்களன்றே! பல தலைமுறைகளாய் இத்தொழிலைச் செய்து அனுபவத்தின் பயனாய் ஒருவித வியவசாய முறைகளை அநுசரிப்பவர்களாயிற்றே! அவர்களை நூதன வழிகளில் திருப்பி புதியமுறைகளை அநுசரிக்கும்படி தூண்டுவது சாத்தியமா? வென்றும் சந்தேகிக்கலாம்.

இந்திய வியவசாயிகளுக்கு புதிய முறைகளை யேற்கும்படி தூண்டுவது புஸ்தகப்படிப்பாலும், புஸ்தகங்களைப் படித்துத் தேர்ந்தவர்களாலும் ஆகக்கூடிய காரியமல்லவென்றே காலேஜையடுத்து, ஒரு சோதனைப் பண்ணையையும் ஏற்படுத்தி பலவிதப் பயிர்களை விளைவித்து அனுப்வசித்தமாய் நமது வியவசாயிகளுக்குக் காட்டுகிறார்கள். தவிர ஆங்கிலேய வியவசாய நிபுணர்களுக்கும் இந்தியாவைப்போன்ற உஷ்ணதேசங்களில் ஸ்தாவரப்பொருள்களின் வளர்ச்சியையும், அவைகளுக்கேற்ற உணவையும் பற்றியவிபரங்கள் சோதித்தறிந்தே உறுதிப்படுத்த வேண்டியதாயிருக்கின்றன. அப்படி யிருக்கையில் இத்தேச வியவசாயிகள் தங்கள் அனுபவத்தினால் கர்னபாரம்பரியமாய் செய்துவந்த கைகண்ட முறைகளை திடீரென்று மாற்றுவதும் கூட நிதானமாய் யோசித்துச் செய்யவேண்டியதா யிருக்கிறது.

ஆனால் கோயமுத்தூர் வியவசாய காலேஜில் பல சாஸ்திர நிபுணர்கள் தகுந்த சாதனங்களோடு விடாமுயற்சியாய் உழைத்து ஒவ்வொரு பயிருக்கும்

தகுந்த உணவையும், செய்பாங்கையும் கண்டுபிடித்தும் செய்து காட்டியும் வந்தார்களானால் நன்மை பயப்பதற்கு சந்தேகமில்லை யென்றே கூறவேண்டியிருக்கிறது. இவர்களின் முயற்சியின் பயனாய் கோதாவரி ஜில்லாவிலும் தென் ஆற்காடு ஜில்லாவிலும் வியாதிகளுக்குட்படாத மோர்ஸ்க் கரும்புகளைப் பயிரிட்டு நல்லபயனைக் கொடுத்திருக்கிறது. கோயமுத்தூர் பண்ணையிலும் இந்தக் கரும்பைப் பயிரிட்டு வெல்லமும் செய்யப்படுகிறது. இவ்விடத்திலும் விசேஷபலனைக் கொடுத்து வருவதாகவே தோற்றுகிறது. இப்படியே பருத்தி, வேர்க்கடலை, மிளகு, சணல், சோளம், கால்நடைகளின் மேய்ச்சல்புல் முதலியவைகளை கவர்ன்மெண்டு பண்ணைகளில் பயிரிட்டு சோதனைகள் செய்ததில் சிலதிருத்தங்களும் சாதகங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படியே இன்னும் அநேக முறைகளும் சீர்திருத்தங்களும் கண்டுபிடிக்கப்பட்டு இந்தகாலேஜ், வியவசாயிகளுக்கு விசேஷபலனைக் கொடுக்கத்தக்கதாயிருக்குமென்றே நம்புகிறேன்.

இவ்வளவுகாலமாய் சைதாப்பேட்டை காலேஜில் வியவசாய நுட்பங்களைக்கற்று தேர்ந்தவர்கள் அநேகமாய் சர்க்கார் உத்தியோகங்களில் பிரவேசித்து அவர்களுக்கு போதித்த வியவசாயக்கல்வி பயன்படாமற் போனதினாலேயே, இனி கோயமுத்தூர் வியவசாயகாலேஜில் சேர்க்கப்படுகிறவர்கள், அக்கல்வியைப் படித்து முடிந்தபிறகு வியவசாயத்தையே தங்கள் முக்கிய தொழிலாக கைக்கொள்ளக்கூடிய வியவசாயக்காரர்களின் பிள்ளைகளாயிருக்கவேண்டுமென்று தீர்மானித் திருக்கிறார்கள். தவிர உபகாரசம்பளம் கொடுப்பதையும் நிறுத்தி சர்க்கார் உத்தியோகம் கிடைக்குமென்று நம்பி வந்து சேருகிறவர்களை சேர்க்கக்கூடாதென்றும் திட்டஞ்செய்திருக்கிறார்கள். பிரவேச பரீக்ஷையில் தேறியவர்களையே சேர்க்கப்படுமென்று ஏற்பாடு செய்திருந்தாலும், தகுந்தகாரணங்களின்மேல் தேறாதவர்களையும் சேர்க்கப்படும். பாடசாலையில் படிக்கவரும் பிள்ளைகள் படிப்புக்காக சம்பளம் கொடுக்கவேண்டியதில்லை. வாடகையின்றி வசிக்க வீடுகளும் கொடுக்கப்படுகிறது. மாணாக்கர்கள் தங்கள் தங்கள் மதாசாரங்களுக்கும் சக்திக்கும் தகுந்தபடி தங்கள் செலவிலேயே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துகொள்ளலாம். இவ்வீடுகளுக்குச சமீபத்தில் குடிதண்ணீர் குழாய்மூலமாய்க் கிடைக்கும்படி வேலைகள் நடந்துகொண்டுவருகிறது மாணாக்கர்கள் உல்லாசமாய்ப் பொழுதுபோக்கத்தகுந்த வசதிகளும் செய்யப்படும். வாசிப்புக்காக ஒரு புஸ்தகசாலையும் அமைக்கப்படும். இக்காலேஜ் நாளது ஜூலை மாதம் 14-ம் தேதி சென்னை கவர்னர் சர் ஆர்தர் லாலியவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இக்காலேஜில் வருஷத்திற்கு 20-மாணாக்கர்கள் வீதம் மூன்று வருஷப் படிப்புக்கு 60 மாணாக்கர்கள் தான் சேர்க்கப்படுமென்பதினாலும், பெருத்ததன

7

வான்களுடைய பிள்ளைகள் மட்டுமே இக்காலேஜில் படிக்கக் கூடியதாயிருக்கிறபடியாலும், கவர்ன்மெண்டார் இக்காலேஜ் திட்டங்களை சற்றுமாற்றி ஏழை வியவசாயிகளும் இதனால் பலனடையும்படி செய்தாலன்றி, பெரிய அரண்மனைபோல் வெகு வேலைத்திறமையும்,காத்திரமும், அந்தமும்,அழகும், படாடோபமும் பொருந்திய காலேஜி கட்டடமும், வியவசாய நிபுணர்கள் குடியிருப்புக்காக கட்டப்பட்டிருக்கிற பங்களாக்களும், மாணக்கர்கள் வசிக்கக் கட்டப்பட்டிருக்கும் விடுதிகளும்,வியவசாயப்பண்ணை பூமிகளும் சீக்கிரத்தில் வேறுவிதமாய் உபயோகப்படுத்த யோசிக்கப்படலாமென்றும் எண்ண இடமிருக்கிறது. இந்த இராஜதானியில் பெருத்த குடித்தனக்காரர்கள் அதிகமாயிருந்தாலும், ஆங்கிலேயபாஷை கற்றவர்கள் குறைவு. அதிலும் மூன்று வருஷத்திற்கு வியவசாயத்தொழிலை கற்கும்படி கைப்பணத்தைச்செலவிட்டு தம்மக்களையனுப்ப விருப்பங்கொள்ளுகிறவர்களும் குறைவு. ஆகையால் இக்காலேஜினால் இவ்விராஜதானியிலுள்ள ஏழை வியவசாயிகள் பயனையடைய வெகுகாலமாகுமென்றே நினைக்கவேண்டியதாய் இருக்கிறது. ஆனால் தற்காலம் கவர்ன்மெண்டார் கிராமாந்திரங்களில் வியவசாயத் தொழிலை விருத்திக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்துடன் சிற்சில கிராம பாடசாலைகளை யடுத்து சிறு தோட்டங்களைச்செய்து பிள்ளைகளுக்கு வியவசாய முறைகளைக் கற்பிக்கும்படி ஏற்பாடுசெய்துகொண்டுவருகிறார்கள். இதற்கு வித்யாபிவிருத்தி டயரக்டரவர்கள் தமது முழுகவனத்தையும் செலுத்திவருவதாகவும் கேள்விப்படுகிறோம். இக்கிராமபாடசாலை உபாத்தியாயர்களில் ஆங்கிலேயபாஷை யறிந்தவர்களில் ஜில்லாவிற்கு வருஷத்திற்கு இவ்வளவு பேர்கள் வியவசாயகாலேஜுக்குச் சென்று குறைந்தது நான்கு அல்லது ஆறுமாதக்காலம் நூதனவியவசாய முறைகளைக் கற்றுக்கொண்டுவருகிறவர்களுக்கு சம்பளத்தைச்சற்று உயர்த்துவதாகவும், அவர்களை வியவசாயப்பண்ணையுள்ள கிராமபாடசாலைக்கு மாற்றுவதாகவும், அவர்கள் அங்ஙனம் நூதனவியவசாய முறைகளைக்கற்கச் செல்லும் காலத்தில் முழுசம்பளமும் கொடுக்கப்படுமென்றும் ஏற்பாடுசெய்து, இவ்வளவு பெருந்தொகை செலவுசெய்து ஏற்படுத்திய பாடசாலையில் கிராம உபாத்தியாயர்கள் வகுப்பு என்பதாக ஒரு வகுப்பையும், ஒருசாஸ்திர பண்டிதரையும் ஏற்படுத்திக் கற்பித்துவந்தால்,இந்த உபாத்தியாயர்கள் தாங்கள் கற்றுவந்ததை தங்கள் பாடசாலைத்தோட்டத்தில் செய்தும், பிள்ளைகளுக்குக் கற்பித்தும் கிராமத்தார்களுக்கு விவரப்படுத்தி சொல்லியும் நல்லபலனை ஏழை வியவசாயிகள் அடையும்படி செய்யலாம். இப்படி செய்வதற்கு கவர்ன்மெண்டாருக்கு விசேஷமாய் அதிகச் செலவு நேரிடாதென்றே கூறலாம். அந்தந்த ஜில்லா லோகல் பண்டு போர்ட்டார்,தங்கள் போர்ட்டுபாடசாலைகளிலிருந்து அனுப்பப்படுகிற உபாத்தியாயர்களின் செலவை பொருத்துக்கொள்வார்கள். இந்த ஏற்பாடு

செய்தால் சீக்கிரத்தில் பெருத்த நன்மை விளையுமென்பதில் தடையில்லை. இதை கவர்ன்மெண்டார் கவனிப்பார்களா?

T. C. V. RAMANA AIYAR,
The Nilgiris.

ஆவணி மாதத்திய பருவங்கள்

MONTH'S OPERATIONS

செங்கற்பட்டு ஜில்லா.—அநேக கிராமங்களில் இந்தமாதம் பிசினி, கரிமோசனம் முதலான நெல் தினுசுகளை விதைக்கவேண்டும். சிறுமணி, நீலன்சம்பா, சின்னசம்பா முதலிய தினுசுகளை நாற்றுவிடவேண்டும். மழைத் தண்ணீர் கட்டக்கூடிய பள்ளக்கால் புன்செய்களில் சம்பா தினுசுகளை மழைப்பதத்தில் விதைக்கஇது நல்ல சமயம். நிலம் உழுது பருவப்படுத்துவதற்குப் போதுமான மழைகள் ஆடி மாதத்தில் பெய்திருக்கின்றன.

சத்துள்ள புன்செய் நிலங்களில் கம்பு பயிரும் இப்போது விதைக்கலாம். இதற்கு அதிக மழை அவசியமில்லை. வரகும் துவரையும் கலப்புப் பயிராய் புன்செய் நிலங்களில் விதைக்க இது தருணம். கிணற்றிறவை நிலங்களில் சிறு வரகு நாற்றுவிட்டு நடலாம்.

மணிலாக்கொட்டையும் ஆமணக்கும் விதைக்கலாம்.

காஞ்சீபுரம், செங்கற்பட்டு, மதுராந்தகம் தாலுகாக்களில் அவுரி இப்போது விதைப்பார்கள். வாழை நடலாம். காய்கறி வகைகளும் விதைக்கலாம்.

தென் ஆர்க்காடு ஜில்லா.—சிதம்பரம், கூடலூர், விழுப்புரம், திண்டிவனம் தாலுகாக்களில் நெல் விதைக்கவேண்டியகாலம் இது. புன்செய்களில் வரகு விதைப்பாகும். திண்டிவனம், விழுப்புரம், திருக்கோவிலூர், கூடலூர் தாலுகாக்களில் இந்த மாதம் மணிலாக்கொட்டை சாகுபடியாகும்.

வட ஆர்க்காடு ஜில்லா.—நெல் நடவேண்டிய காலம் இது. இந்த மாதக்கடைசியில் புன்செயில் கேள்வரகு விதைப்பதற்கு நிலத்தை இப்போது நன்ருய் உழுது எருச்சிதறிவைக்கவேண்டும். வரகும் விதைக்கலாம்.

போளூர், ஆரணி, வந்தவாசி, ஆற்காடு, வாலாஜபேட்டை, கார்வேடிநகரம், காளஹஸ்தி முதலான இடங்களில் புன்செய்ச்சோளம் இப்போது விதைப்பார்கள். சால்விதைக் கலப்பைகொண்டு விதைத்தால் உபயோகமாயிருக்கும். சந்திரகிரி தாலுகாவிலும், பலமனேர், புங்கனூர் முதலான இடங்களிலும், எள் சாகுபடிசெய்யலாம்.

கார்வேடிநகரம் காளஹஸ்தி சமஸ்தானங்களில் அவுரி இப்போது சாகுபடியாகும். மணிலாக்கொட்டையும் விதைப்பார்கள்.

சேலம் ஜில்லா.—நெல் விதைப்பாகும். சேலம் நாமக்கல் தாலுகாக்களில் புன்செய் சோளம் விதைப்பு ஆகும். சேலம், திருச்செங்கோடு தாலுகாக்களில் புன்செய் கம்பு ராகிப்பயிர்களின் விதைப்பு முடிவாகும். சேலம் தாலுகாவில் இப்போது சாமை விதைக்கலாம். ஆத்தூர், நாமக்கல, திருச்செங்கோடு தாலுகாக்களில் வரகு விதைக்க நிலம் பருவம் செய்யவேண்டும்.

கோயமுத்தூர் ஜில்லா.—சத்யமங்கலம், பவானி, ஈரோடு, கரூர்தாலுகாக்களில் நெல் நடுகை இந்தமாதத்துடன் முடியும். தாராபுரம், பல்லடம், உடுமலைப்பேட்டை, கோயமுத்தூர் தாலுகாக்களில் நெல்விதைக்க இதுதருணம். பவானி சத்யமங்கலம் தாலுகாக்களில் மானுவாரிச்சோளம் விதைக்கவேண்டும். எல்லா இடங்களிலும் மானுவாரிக்கம்பும் வரகும் கேள்வரகும் இப்போது விதைக்கலாம். கரூர்தாலுகாவில் இறவையில் கேள்வரகு சாகுபடியாகும். அத்துடன் மணிலாக் கொட்டையையும் கலந்து சாகுபடிசெய்தால் அநுகூலமாயிருக்கும். துவரை, உழுந்து, ஆமணக்குமுத்து, சாகுபடி செய்யவேண்டிய காலம் இது.

தாராபுரம், உடுமலைப்பேட்டை, பல்லடம், கோயமுத்தூர் தாலுகாக்களில் மணிலாக்கொட்டை சாகுபடியாகும்—பவானி, சத்யமங்கலம், ஈரோடு, தாராபுரம், கரூர்தாலுகாக்களில் நாடன் போர்போன்பருத்தி வகைகள் சாகுபடி செய்யலாம்.

பொள்ளாச்சி, கோயமுத்தூர் தாலுகாக்களில் எள்ளும், உடுமலைப் பேட்டை தாலுகாவில் வெள்ளைப்பூடும், கோயமுத்தூர் தாலுகாவில் மிளகாய்ப்பயிரும், இப்போது சாகுபடி செய்யவேண்டிய காலம்.

உதகமண்டலத்தில்.—உருளைக்கிழங்கு நடலாம்.

தஞ்சாவூர் ஜில்லா.—பட்டுக்கோட்டை தாலுகாவில் இளநெல் தினுசுகள். விதைக்கலாம். மற்றதாலுகாக்களில் பிசானம் சம்பாத்தினுசுகள் நடுகையாகும். அவைகளுக்கு இப்போது நாற்றங்கால் தயார் செய்யவேண்டும். எல்லா இடங்களிலும் துவரையும் உழுந்தும் விதைக்கலாம். பட்டுக்கோட்டை தாலூகாவில் மானுவாரிக் கேள்வரகு விதைப்பார்கள். சால்விதைக்கருவி கொண்டு விதைத்தால் இந்தத் தாலுகாவில் அடிக்கடி மழைகள் குறைந்து பெய்வதாயிருக்கு மாகையால் கொஞ்சக்காலத்துக்கு ஈரம் தாங்கும்.

எல்லா தாலுகாக்களிலும் மக்காச்சோளம் விதைக்கலாம். நிலத்தை ஆழமாய் உழுது சரியானபடி எருவிட்டு விதை போடவேண்டும். எல்லா இடங்களிலும் கம்பும் விதைப்பார்கள்.

திருச்சினப்பள்ளி ஜில்லா—திருச்சினப்பள்ளி, குளித்தலை தாலுகாக்களில் சம்பாநடுகை இப்போது முடிவாகும்.

உடையார்பாளையம், பெரம்பலூர், முசிரி தாலுகாக்களில் சம்பாநெல் நடுகையாகும்.

உடையார்பாளையம், பெரம்பலூர் தாலுகாக்களில் மானுவாரி நெல் விதைக்க இது காலம். சில தாலுகாக்களில் மானுவாரியில் வெள்ளைச்சோளமும் காக்காய்ச்சோளமும் விதைக்கலாம். வரகும் துவரையும் கலந்து விதைக்கலாம். இறவை, ராகி, தினை, மக்காச்சோளம் இவைகளை இப்போது பயிரிடலாம்.

மதுரை ஜில்லா.—கொடைக்கானல், பழனி, பெரியகுளம், திண்டுக்கல், மதுரை, வேலூர், திருமங்கலம் தாலுகாக்களில் பெரிய சம்பா நெல் இப்போது சாகுபடிசெய்யலாம்.

திண்டுக்கல், வேலூர், மதுரை தாலுகாக்களின் சில பாகங்களில் இளவித்து நெல் தினுசுகள் விதைப்பார்கள். பாங்கு நெல் சாகுபடி செய்தால் அவர்களுக்கு அநுகூலம் உண்டாகும். புன்செயில் துவரை, உழுந்து, பச்சைப்பயிறு, காணம் (கொள்ளு) இந்த காய்த்தானியங்கள் இந்த ஜில்லாவில் இப்போது சாகுபடியாகவேண்டும்.

கொடைக்கானல், பழனி, பெரியகுளம், இராமநாதபுரம் தாலுகாக்களில் மானுவாரிக்கம்பு, ராகி, வரகு, குதிரைவாலிப்பயிர்கள் இப்போது விதைக்கக்கூடும்.

கொடைக்கானல் தாலுகாவில் கோதுமை விதைக்கவேண்டிய காலம் இது.

திருநெல்வேலி ஜில்லா.—ஒட்டைப்பிடாரம் சாத்தூர் தாலுகாக்களில் இப்போது கார்நெல் சாகுபடியாகும். அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுந்தம் நாங்குநேரித் தாலுகாக்களில் சம்பாநெல் நாற்றங்கால்கள் இப்போது உழுது எருவிட்டுப் பருவம் செய்யவேண்டும். ஒட்டைப் பிடாரம் சாத்தூர் தாலுகாக்களில் இப்போது மானுவாரிச்சோளம் சாகுபடியாகும். சால்விதைக் கலப்பையின் உபயோகம் இந்தத்தாலுகாக்களிலுள்ள சில கிருஷிகருக்கு நன்றாய்த் தெரியுமாதலால் அவர்களாவது சோளத்தை விதைக் கலப்பைகொண்டு விதைத்து அதன் அநுகூலத்தைப் பரிட்சிக்கலாம். ஸ்ரீ வில்லிபுத்தூர் சங்கரநயினார் கோவில் தாலுகாக்களில் புன்செய்களில் சாமையும், ஒட்டைப்பிடாரம், சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், நான்குநேரித்தாலுகாக்களில் வரகும்இப்போது விதைக்கவேண்டியகாலம். நிலத்தைப் பார்அறஉழுது

விதைத்தால் அதிகப்பயன் அடையலாம். ஒட்டைப்பிடாரம், சாத்தூர், ஸ்ரீ வில்லிபுத்தூர் சங்கரநயினர் கோவில் தாலுகாக்களில் இறவைக் கேள்வரகு இப்போது நடலாம். அதற்குக் களைவெட்டும்போது பயிரின் ஊடே மணிலாக்கொட்டை விதைத்து வைத்தால் பிரயோஜனம் அதிகம்.

சமாசாரக் குறிப்புகள்

NEWS AND NOTES

சென்ற ஜூலைமீ 14வ யன்று சென்னை கவர்னர் சர் ஆர்தர் லாலி அவர்கள் கோயம்புத்தூரில் புதிதாய்க் கட்டிமுடிந்த கிருஷிக் கல்விச்சாலையையும் பரீட்சணசாலையையும் திறந்தார். அப்போது சென்னை விவசாய இலாகா கமிஷனரான மெஸ்தர்காசில் ஸ்டேவர்ட் ஸ்டேவர்ட் துரையவர்கள் சென்னை விவசாய வித்தியாசாலை தோன்றிய காலம்முதல் அது விர்த்தியடைந்துவந்த விஷயத்தைப்பற்றிப் பேசினர். கவர்னரவர்கள் கிருஷி விர்த்தியடைய வேண்டிய விஷயத்தைப்பற்றியும், கிருஷிகரின் நிலைமை சீர்படவேண்டிய அவசியத்தையும்பற்றி அதிக அநுதாபத்துடன் பேசினர்.

***

இங்கிலாந்தில் கிருஷிமகாசாலையில் வாசிக்கச் சென்றிருந்த ம-ா-ா-ஸ்ரீ, ஆநந்தராவ் என்பவர் நாளது ஆகஸ்டுமீ 6வயன்று பம்பாயில் வந்து இறங்கினர். இங்கிலாந்தில் அதிக கௌரவத்துடன் பரிட்சைகளில்தேறித் திரும்பியதாகத் தெரிகிறது. அவரால் நமது தேசத்துக்கு அதிகக்ஷேமம் உண்டாகக்கூடுமென்று நினைக்கிறோம்.

***

நாளது ஆகஸ்டுமீ 10வயன்று பங்களூரில் கூடிய (United Planters' Association) யூனைட்டெட் ப்ளான்டர்ஸ் சபையாரின் முன்புக்கு கவர்ன்மெண்டாரால் நேமிக்கப்பட்ட (Scientific Officer) சாஸ்திர நிபுணரான மெஸ்தர் ஆன்ஸடெட் என்பவர் காப்பித்தோட்டங்களில் காப்பி, தேயிலைமரங்களுக்கு ஊடேயுள்ள எல்லாவிதமான பூண்டுகளையும் களைகளென்றுநினைத்து அவைகளை வெட்டியெறிந்துவிடும் வழக்கம் தற்காலத்திலிருக்கிறதென்றும், அதனால் நிலம் சுத்தமாய்க் காலியானலுங்கூட அப்படிச்செய்வது சரியல்லவென்றும், காய்த்தானியப் பயிர்வகையைச்சேர்ந்த செடிகள் ஏதாவது முளைத்திருந்தால் அவைகளை வெட்டியெறியாமல் விட்டுவைப்பதால் நிலத்தில் நைட்ரோஜன்என்னும் வெடியுப்புசத்து அதிகப்பட்டு காப்பிச்செடிகளுக்கும் தேயிலை மரங்களுக்கும் விசேஷமான எருவாகிறதென்றும் தெளிவாய்விளக்கி ஒரு உபந்நியாசஞ்செய்தார். இந்தக் காரணத்துக்காகவே நன்செய் புன்செய்களில் காய்த்தானியங்களில் எதையாவதுஒன்றை பசுந்தாள் எருவுக்காக விதைத்து உண்டாக்கி நிலத்தில் மடியும்படி உழுதுவிடவேண்டுமென்று நாம் அடிக்கடி சொல்லிவருகிறோம்.

New Books for Sale.

மில்டேரி இந்து பாகசாஸ்திரம்.

மானிடஜென்மமெடுத்த நாம் எவ்வளவோ பிரயாசமும் தேககஷ்டமுமெடுத்து சம்பாதிப்பது சாண்வயிற்றுக்காகவே. அவ்வயிற்றை நிரப்புவதை மனதிற்குத் திருப்தியாகும்படி புசித்துவந்தால் ஜீவநாள்வரையில் அழியாத தேகவல்லமை பெற்றிருக்கக்கூடும். அவ்வுணவுகளில் "மாம்ஸம் மாம்ஸத்தை விருத்திசெய்யும்" என்கிறபடி இப்பிரபஞ்சத்தில்பெரும்பாலார் மாம்ஸபக்ஷணிகளாயிருக்கின்றனர். அவர்கள் மாம்ஸத்தை நன்ருய் சமையல் செய்துபுசிக்கும் பக்குவத்தைத்தெரிந்துகொள்ளும்பொருட்டு அக்பர் பாட்சா, சிவாஜி, ஸரபோஜி மஹாராஜாக்களும் இன்னும் அநேக பிரபுக்களும் ஆவலோடு உருசியுடன் புசித்த அநேகமுறைகளும், மஹம்மதியர்களது சிலஅருமையான பாகங்களும், மாம்ஸபட்சணம் செய்யாதவர்கட்கு உபயோகமாகும்படிஅரிசி, பருப்பு, ஜலம் இவற்றின் சுத்திகளும், மல்லிகைப்பூவாசனை அன்னம், வெங்காயத்தாளித அன்னம்,மல்கோபாப் பழப்புலவு, பகாராபுலவு முதலிய சைவமுறைகளும்,துவையல்,ஊறுகாய் வகைகளும்,பலகார வகைகளும், பாயஸம், சரபத்துவகைகளும் வசனநடையி லச்சிட்டுளது. சற்று வாசிக்கத்தெரிந்த பெண்டுகள் முதல் ஒருவரைக்கேட்காமலே பாகங்களைச் செய்யலாம்.

விலை அணு 8, வி. பி. சார்ஜ் அணு 3.

விநோதவேடிக்கைக் கதாமஞ்சரி

எல்லாம் சிரிப்பு! எல்லாம் வேடிக்கை, வாங்கி வாசியுங்கள்.

இதை வாசிப்பவர்களும் கேட்பவர்களும் வயிறெல்லாம் புண்ணுகும்படி கீழே விழுந்துவிழுந்து சிரிப்பார்கள். படிக்கப்படிக்க மிக வேடிக்கையாயிருக்கும். இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பவர்கட்கே இதன் உண்மைவிளங்கும். விலை அணு 6, வி. பி. சார்ஜ் அணு 3.

ஜெயங்கொண்ட சௌந்தரவல்லிக்கதை.

ஆண் பெண்முதலிய சகலரும் மிகவேடிக்கையாக வாசிக்கும்படி செவ்விய தமிழ்நடையில் எழுதப்பட்ட ஓர் அருமையான கதை.

கதைபடிக்க அவாக்கொள்வோர் இதைப்படிக்குந்தோறும் சந்தோஷக் கடலில் மூழ்கி ஆனந்தங்கொள்வாராயினும் முடிவில் தெளிந்த ஞானத்தையும் பெறுவார்களென்பது திண்ணம். கதையின் மூலமாகவே பல அருமையான நீதிவிஷயங்களை அற்புதமாயெடுத்துக் காட்டியுள்ளது.

விலை ரூபா 1, வி. பி. சார்ஜ் அணு 4.

ஆசாரத்திரட்டு.—இது ஓர் அருமையான இந்துசாஸ்திரம், இந்துக்களாகிய நாம் பிரதிதினம் நடந்துகொள்ளவேண்டிய விதிகள் நேமநிஷ்டைகள், அனுஷ்டானங்கள் முதலிய சுமார் 200-விதிகட்குமேல் வசனநடையிலச்சிட்டுள்ளது. விலை அணு 4, வி. பி. அணு 3.

மேற்கண்டுள்ள புத்தகங்களைக் கீழ்க்கண்டவருக்கு எழுதி வி. பி. மூலமாகவாவது நேராகவாவது பெற்றுக்கொள்ளலாம். தங்கள் முழுவிலாசத்தையும் தெளிவாயெழுதி இந்தபேப்பரின் பெயரையும் கண்டெழுதவும்.

சுகந்த ஸ்நாநப்பொடி

இந்த வாசனையுள்ள பொடியை பிரதிதினம் குளிக்கும்போது உடம்பிற்குத் தேய்த்துக் குளித்துவந்தால் வியர்வைநாற்றம், கற்றாழைநாற்றம், அழுக்குத்தேமல், உடம்பில் நமை, சொறி, சிரங்கு, கைகால் எரிச்சல், மேகாங்கை, மேகவூரல், கிரந்திமுதலிய இன்னும் அநேகவித தோலைப்பற்றிய வியாதிகள் நிவர்த்தியாவதன்றி தேகத்தில் சுகந்தவாசனை கமகமவென்று வீசிக்கொண்டே ஆரோக்யமாயிருக்கும்.

டப்பி 1-க்கு அணு 4. 6-டப்பி ரூபா 1-4. 10-டப்பி ரூபா 2.

க. பெ. நாராயணசாமி முதலியார், கமலநாயகி விலாஸ்,

நெ. 27, வைக்கோற்காரன் தெரு, வேப்பேரி போஸ்ட், சென்னை

சுகந்த பரிமள மூக்குத்தூள்

இச்சுகந்த பரிமள மூக்குத்தூளானது சில மூலிகை மருந்து முதலிய 12-வகை தினுசுகளும் சேர்த்து வெகு பிரயாசையுடன் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு சிட்டிக்லகையெடுத்து காலணு சாதாரண மூக்குத்தூளுடன் கலந்துவிட்டால் அந்தத்தூள்முழுவதும் அதிமனோரம்மியமான வாசனைமயமாய்விடுவதுடன் அதன் காரத்தையும் நெடுநாள் பாதுகாக்கும். ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், தலைநோய், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், நாசியில் துர்நாற்றம் முதலிய வியாதிகளும் இருந்தவிடம் தெரியாமல் பறந்துபோம். அடிக்கடி தூள் போடும்படி தூண்டும் அபேக்ஷையை நீக்கி அவ்வப்பியாசத்தை சிறுகச்சிறுகத் தாமதப்படுத்தும் குணமும் இதனிடத்துள்ளது. அநேக பிரபுக்கள் தங்கள் வீடுகளில் இதை குடும்பஅவிழ்தமாக வைத்து உபயோகித்துவருகின்றார்கள். இவ்வளவு பிரபல்யமுடையதாயும், மேற்கூறிய வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயுமுள்ள ஷை மூக்குத்தூளால் பல சுகுணங்களே நிறைந்துள்ளனவென்று அநுபவத்தில் தெரிந்துகொள்ளலாமேயன்றி நமது மூக்குக்குநேராக நாமே புகழ்ந்துசொல்வதில்பயனில்லை. ஒரு தடவையாகிலும் பரீக்ஷித்துப் பார்ப்பீராக. கிரயம் புட்டி 1-க்கு அணு 4, வி. பி. சார்ஜ் அணு 3. 12-க்கு ரூபா 2—8—0, வி. பி. சார்ஜ் அணு 8.

தந்தசுத்திப் பொடி

ஜன்னியினலாவது சீதளத்தினலாவது சைத்தியத்தினலாவது மேகத்தினலாவது பல் அசைதல், குத்தல், கடுத்தல், பல்நோய், பல்லில் ஈர்கட்டுதல், ஈர்கள் வீக்கம், ஈர்களில் ரணம், பல்லில் சீழ் இரத்தம் வருதல், பல் ஜிலுஜிலுப்பு முதலிய வியாதிகளையுடையவர்கள் இந்த வெண்ணிறம் பொருந்திய பற்பொடியினல் பிரதிதினம் பல் துலக்கிவந்தால் 3-4 தினங்களில் நிவர்த்தியாக்கி ஈறை கெட்டிப்படுத்தி பற்களை இறுக்கி சகலதுன்பத்தையும் ஒட்டிவிடும். நெடுநாளாய் அனுபவத்திற்கு வந்தது. 4-5 வயது குழந்தைகளுக்குக்கூட இதை உபயோகப்படுத்தி வழக்கத்தில் கொண்டுவந்தால் ஆயுசுமட்டும் பல்லைச்சார்ந்த வியாதிகள் யாதொன்றும் அணுகாது. பெண்கள் புருஷர்கள் கிழவர்கள் யாவரும் உபயோகிக்கலாம் பல் கறுக்காது. டப்பி 1-க்கு அணு 4. 6-டப்பி ரூபா 1—4. 10 டப்பி ரூபா 2.

கூந்தல்வளர் சுகந்த பரிமளத்தைலம்.

நண்பர்காள்! தாங்கள் அநேகவித கூந்தல்தைலத்தைப் பார்த்தும் உபயோகித்தும் இருப்பீர்களாயினும் இதைப்போல் எங்கும் பார்த்திருக்கமாட்டீர்கள். இத்தைலத்தை உபயோகித்தால் தலைமயிர்கள் மேகம்போலும், நாகப்பழம்போலும் கறுத்து செழிப்பாக வளருவதுடன் தலையின் சுண்டையும் நீக்கிவிடும். மண்டையின் மூளைக்குக் கொதிப்பையும், கபாலவரட்சியையும் நீக்கி மயிர்கால்களுக்குக் குளிர்ச்சியையும் உண்டுபண்ணி, கண்ணில் நீர்வடிதல், கண் அருகல், கண்எரிவு முதலான நேத்திரரோகங்களை நீக்கி கண்களுக்கு மிகுந்த குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தை யுண்டுபண்ணும். வாங்கி உபயோகித்துப்பார்க்க இதன் பெருமை தெரியும்:

ஆழாக்குதைலமடங்கிய டப்பி 1-க்கு கிரயம் ரூபா 1.

மேகவெள்ளைச் சூரணம்

இது பல காரணங்களின லுண்டாக்கப்படுகிற மேகவெட்டை, நீர்சுருக்கு, நீர்குத்தல், நீரெரிச்சல், நீர்தாரையிலிருந்து சீழ் ரத்தம் வடிதல் முதலிய வியாதிகள் ஆண் பெண் இருதிறத்தவர்களுக்கும் 10-நாளில் ஆச்சரியப்படத்தக்க அனுகூலத்தைக் கொடுக்கும். டப்பி 1-க்கு அணு விலை 12. 6-டப்பியின் விலை ரூபா 4.

☞ மேற்கண்டுள்ளவற்றை கீழ்க்கண்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், கமலநாயகி மேடிகல் ஹால்,

நெ. 27, வைக்கோற்காரன் தெருவு, வேப்பேரி போஸ்ட், சென்னை.

ஜாம் நகரத்திலுள்ள ஜாம் சாஹிபினுல் அங்கீகரிக்கப்பெற்று

200-வருஷ காலமாய்ப் பிரசித்தியுடன் நடைபெறுவது

வீரிய விருத்திக்கும்

இழந்த பலத்தைத் திரும்ப அடைவதற்கும் இரண்டு உயர்ந்த ரத்னவுஷதங்கள்

மதன் மஞ்சரி மாத்திரைகள்

சரீரத்தில் இருக்கப்பட்ட நரம்புகளை பலஹீனமாக கெட்ட நடவடிக்கையால் கெடுத்துக்கொள்ளுகிறோம்

மதன்மஞ்சரி:—நரம்புகளுக்கு வலிவு உண்டாக்கத்தக்கது

,, வயசு சென்றவர்களுக்கு பால்யதனத்தை உண்டாக்கச் செய்யும்.

,, மனுஷர்களை எக்காலமும் பால்யமாகச் செய்யும்.

,, மனுஷனுடைய இந்திரியத்திற்கு வலுவுகொடுக்கும்.

,, இதைச் சாப்பிடுகிறவர்களுக்கு பிரயோஜனப்படாமல் போகாது.

,, நரம்புகளுக்கும் வலுவு உண்டாகும்.

,, இதைத் தவிர மேன்மையான டானிக் கிடையாது.

,, இதைச் சாப்பிடுகிறவர்கள் எல்லா சுகமும் அடையலாம்.

இவ்வியாதிகளெல்லாம் நிவர்த்தி செய்கிறதற்காக நம்முடைய மனசுக்கு சுகம்கொடுப்பது மதன்மஞ்சரி தவிர வேறே ஒன்றுமில்லை. மேற்கண்ட மருந்து சாப்பிட்டால் 4-தினங்களுக்குள்ளாக அதனுடைய பயன் தெரியவரும். இந்த மருந்தை 20-நாள் விடாமல் சாப்பிட்டால், அவர்களுடைய சரீரத்தைப் பற்றி வேறே சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை.

மதன்மஞ்சரி மாத்திரைகளைச் சாப்பிட்டுவருகிறவர்களுடைய தேக சவுக்கியத்தையும் பலத்தையும் அவர்களால் சொல்லத்தரமல்ல.

40 மத்திரைகள் அடங்கிய ஒருடப்பிக்கு விலை ரூபா 1. வி. பி. வேறு.

நபும்ஸகத்வாரி கிரத்

நரம்பை விருத்திசெய்து பலப்படுத்துவதற்கான ஓர் ஆயிண்டமெண்டு. மேற்பூசுதற்கு உதவுவது. நரம்புகளைத் தளரவிடாமற் பாதுகாப்பது. சிறு வயதுக் கோளாறுகளினுல் சரீரபலம் இழந்துபோனதை இந்தமருந்து திரும்பக்கொடுத்து மிக்க மேன்மையோடிருக்கச்செய்வது.

2 தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1-0-0

ப்ரோப்ரைடர்,
ஆயுர்வேதோய அவுஷதாலயம்
ராஜவைத்திய
நாராயணஜீ, கேசவஜீ,

மதராஸ் பிராஞ்சு;
No. 1-74, சைனுபஜார் ரோட்,
ஸௌகார்பேட்டை,
மதராஸ்.

No More Cholera.

உயர்ந்த நான்கு தங்கப்பதக்கங்களும், முதல்தரமான அநேக
யோக்யதா பத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன

காலரா (வாந்திபேதி) இனி இல்லை !

மரணங்களுமில்லை !

ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி,

பண்டித டி. கோபாலாசார்யர் எ.வி.எஸ்.

அவர்களால் சாஸ்திர முறைப்படி நேரில் தயார்செய்யப்பட்ட:—
கற்பூராத்யரிஷ்டமும், விஷூசிஸஞ்சீவினி மாத்திரைகளும்

இவை காலரா என்னும் வியாதியைத்தடையின்றி நிர்மூலமாக்கும், இம்மருந்துகள் பல்லாயிரம் மனிதரை மரணத்தினின்றும் காப்பாற்றின. இம்மருந்துகளின் முக்கியமான மகிமை யென்னவெனில் :—

1. தக்ஷணத்தில் வாந்திபேதியை நிறுத்தி அதனாலுண்டாகும் துர்க்குணங்களையெல்லாம் போக்கும்.

2. ஜன்னியைக்கொஞ்சமும் தலையெடுக்கவொட்டாது.

3. சரீரத்தில் உஷ்ணத்தைக் காப்பாற்றி தேகத்திற்கு சீதளத்தை வரவொட்டாமற்செய்யும்.

4. மூத்திரத்தைத் தடையின்றி வரச்செய்யும்.

5. வியாதி எந்த ஸ்திதியிலிருந்தபோதிலும் குணத்தைக் கொடுக்காமற்போகாது.

உங்களுடைய மித்திரர்களையும், பந்துக்களையும் பிராணாபாயத்திலிருந்து காப்பாற்றுவதற்கு முதலில் ஒரு புட்டியாவது இதை சங்க்ரஹித்து உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இவ்விஷயத்தில் எங்களுக்கு அனேகமாயிரம் யோக்கியதாபத்திரங்கள் கிடைத்திருக்கின்றன

கற்பூராத்யரிஷ்டம்
விஷூசிஸஞ்சீவினி } விலை அணா 12.

போஸ்டேஜ் பாகிங் முதலிய செலவு பிரத்தியேகம்.

ஆயுர்வேதாச்சிரமம்,
44, ஆசாரப்பன் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை

டெலிக்ராம் அட்றஸ்

"பண்டிட்" அட்றஸ்.

N. B:—இன்னும் இதரபேடெண்டு சாஸ்த்ரீக மருந்துகளும் அவைகளின் காட்லாக்குகளும் கடிதமெழுதுவோர்க்கு இனாமாயனுப்பப்படும்.

P. SUBBA ROY'S

Wonderful Auyurvedic Wedicines.

பி. சுப்பறுய், பரங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

தயவுசெய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

பி, சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

23. "கேசஸுவாசனி":—உசிதமான சீமை வாசனை சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும் வளரும். கண்கள் குளிரும், தலைநோய் போகும், மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு அல்லது 2-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

24. "இரக்ஷாமிர்தம்":—தாவரவர்க்கத்தைச்சர்ர்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி தேயிலைக்குப்பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்க்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அறைக்குழந்தைமுதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம்,ஜன்னி, கர்ப்பம்,பிரசவம்,காலரு முதலிய காலங்களில் ஷை சூரணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலைச் சேர்க்காமல் சமயத்திற்கு தக்கபடி உபயோகிக்க ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவதுமன்னியில் நோய்வராமல் காக்கும். பித்தவாயு,காசம்,க்ஷயம், அஜீரணம், மலச்சிக்கல்,தலைவலி முதலியவைகளை, போக்கும். இரத்தத்தை சுத்திசெய்து தாதுவிர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களுக்கும், மதுமூத்திரம், அதி மூத்திர ரோகிகளுக்கும் அருமையான வஸ்து. இதை வழக்கமாய் உபயோகித்துவந்தால் மதுமூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும்,நீரின் அளவையும் குறைத்து மூத்திரரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தை சாந்திசெய்யும். மூளையை பலப்படுத்தி ஞாபகசக்தியை அதிகப்படுத்தும். மாணுக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் பகைக்கத்தக்க குணமுள்ள காபி தேயிலையை விட்டுவிட்டு இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6, வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகம்.

25. "சர்பத்துகள்":—தாமரைபுஷ்பம், திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜாபுஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், கிச்சிலிப்பழம், பாதம், மாதளம்பழம், அன்னாசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தம்பழம், இஞ்சி சர்ப்பத்துகள். ஷை சர்ப்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒருசேர் குளிர்ந்த ஜலத்திலாவது சோடாவாடரிலாவது சுமார் 5-துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும் எந்த பழசர்பத்து உபயோகிக்கப்பட்டதோ அந்தபழத்தின் மதுரமான வாசனையோடுங்கூடிய சர்பத்தாகும். ½ அவுன்ஸ் சீசாக்களில் விற்கப்படும்.

இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடாவாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணு 8, வி. பி. செலவுகள் 1-முதல் 3-சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

26. "சுகந்த மூக்குத்தூள்":—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒருநாளைக்கு ஒருமனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானே அவ்வளவு சாதாரண புகயிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிக்கை எடுத்து நன்றாய்க் கலந்துகொண்டால் அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிக்கை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனாவசியம். இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம் போகாமலிருக்கும். தலைவலி, பீனிசம், சலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், பண்டைக்குற்று, நீர் பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவாச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தை நீக்கி சதா கமகமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்குப் போதுமானது. சீசா 1-க்கு அணு 4, வி. பி. செலவு 1-முதல் 3-சீசாக்கள்வரையில் அணு 3 பிரத்தியேகம், 4-முதல் 6-சீசாக்கள்வரையில் வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம், 7-முதல் 12-சீசாக்கள்வரையில் வி. பி. செலவு அணு 7 பிரத்தியேகம்.

27. "அசோக கிருதம்".—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல், பகிஷ்டை காலங்களில் வெகு கடினமான சூலைநோயுண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெறிவு, தேகங்கனத்தல், வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில்ரஜஸ் அதிகமாகப்போகுதல் முதலிய ரஜஸ்தோஷங்களும், யோனி சுருக்கம், யோனிப்புற்று, கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள் இவைமுதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற ஔஷதம். சூதக சூலைரோகங்களுக்கும் மற்றும் அநேக யோனிசம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய் நன்மை செய்யும். விலை சீசா 1-க்கு ரூபா ஒன்று. 1-அல்லது 2 சீசாக்கள்வரையில் வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

பி, சுப்பராய், பறங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

"Rajambal"

கேட்ட உடன்சந்தோஷத்தையும்,

பார்த்த உடன் ஆநந்தத்தையும்,

வாசித்த உடன் மனோ உற்சாகத்தையும்

முடித்த உடன் வியப்பையும்,

கொடுக்கும் நாவல் எது?

"இராஜாம்பாள்"

என்னும் துப்பு அறியும் நாவல்
ஒன்றுதான்.

கண்டோர் மனதைக்கவரும் மூன்று சித்திரபடங்களுடன்
கூடியது.

விலை அணா 12.

தபால் கூலி வி. பி. கமிஷன் அணா **2.** பிரத்தியேகம்

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,
5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

இரங்கோன்

இரஞ்சித போதினி

எப்பொழுதும் சித்திரப்படங்களோடு பிரகாசிப்பதுடன் அறிவைப் பரவச்செய்து ஆனந்தத்தை விளைவித்து யாவர்க்கும் சுகசெல்வ நன்மைகளையும், சுகிர்தபாக்கிய பொக்கிஷத்தையும், நீடூழி பெருகுவிக்கும் ஓர் நவீன மாதாந்த பத்திரிகை. இதிலடங்கிய விஷயங்களாவன:—

சுதேச சுகாதார சங்கத்தின் மெம்பர்கள் எழுதும் வியாசங்கள், மனோவசிய சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், அமெரிக்க சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்த நூதன விஷயங்கள், வைத்தியக்குறிப்பு, பாலர் பரிபாலனம், ஸ்திரீகளுக்குரிய விஷயங்கள், விநோத விசித்திர விஷயவிளக்கம், அதிரசமஞ்சரி, ஹிதோபதேசம், பழமொழி, விடுகதை விஞக்கள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தமானங்கள், ஜீவாதார மந்திரோபதேசம் முதலிய அரிய பெரிய பல விஷயங்கள்.

இதன் வருஷசந்தா ரூபா 2 தேவையானவர்களுக்கு மாதிரிப்பிரதி அனுப்பப்படும்.

மானிட மர்மசாஸ்திரம்

ரூபாய் 300 இனம்

விவரம் பின் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு புஸ்தகத்திலும் கணடுகொள்ளலாம்.

		அணா
1.	மானிட ஜீவியத்தின் பலபருவங்கள் (ஓர் உபந்நியாசம்) 23 படங்களுடன்	6
2.	இல்லற இன்ப இரகசியம் (29 படங்கள்)	12
3.	ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும் (46படங்கள்)	12
4.	மாதாவின் மாக்ஷிமை (18 படங்கள்)	6
5.	சிசுவுற்பத்தி (34 படங்கள்)	6
6.	கர்ப்பக்கால சுகாதாரவிதிகள் (8 படங்கள்)	4
7.	கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்	6
8.	மருத்துவசாஸ்திரம் (8 படங்கள்)	8
9.	சிசு பரிபாலனம் (15 படங்கள்)	4
10.	ஆண், பெண் மலட்டிற்கு நிவாரணம் (5 படங்கள்) ...	8
11.	ஆண்மையின் அழிவும் அதன்மீட்சியும் வாலிபருக்கு (6 படங்கள்)	8
12.	சமயோசித சஞ்சீவி	2

தபாற் செலவு ஒரு அணா

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரே தடவையில் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு தபாற்செலவு உள்பட ரூபா 5-க்கு அனுப்பப்படும்.

12 புஸ்தகங்களையும் ஒன்ருகச்சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்து தங்க எழுத்துக்கள் பதித்த பிரதி ஒன்றுக்கு தபாற் செலவு உட்பட ரூபா 5-8-0.

மானேஜர்,

"இரஞ்சித போதினி ஆபீஸ்"

11, 12 கமிஷனர் ரோட்,

இரங்கோன்.

வி. ராமச்சந்திரன் பிரதர்ஸ்,

புஸ்தக வியாபாரி,

32, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்

இனிய தமிழ் நாவல்கள்

	ரூ.	அ.
கமலனி கலஹம்ஸம் ...	0	8
இராஜாம்பாள்	0	12
சந்திரகாந்தா	0	12
பிரேமகலாவதீயம்	0	12
சுந்தரி மனோஹரன் ...	0	12
ஹனுமான் சிங்	0	12
காமாட்சி	0	8
புருஷோத்தமன்	0	10
சாரதாம்பாள்	0	8
சந்திரசேகரன்	0	8
துர்கேசநந்தினி	1	0
ஜடாவல்லவர் 1 பாகம் ...	0	8
ஷை 2 ,, ...	0	10
ஞானம்பாள்	0	6
வசீகரி	1	0
மங்களாம்பாள	0	8
விஜயலெட்சுமி	0	10
போஜசரித்திரம்	1	8
சுப்பிரமணியர் தோத்திரம்...	0	3
வத்ஸலா	0	8
சுசீலா	1	0
குணலாபன்	0	5
பவானந்தர் துப்பரியும் கதை	0	8

	ரூ.	அ.
ம-ா-ா-ஸ்ரீ, ப. சம்பந்தமுதலியார், B.A., B.L. இயற்றிய		
லீலாவதி சுலோசனை ...	0	12
கள்வர் தலைவன்	0	8
மனோஹரன்	0	12
யயாதி	0	8
அமாலாதித்யன்	1	0
சாரங்கதரன்	0	8
வேதாள உலகம்	0	8
இரண்டு நண்பர்கள் ...	0	12
சத்ருஜித்	0	12
காதலர் கண்கள்	0	12
பண்டித நடேசசாஸ்திரி போட்ட		
தீனதயாளு	0	8
மதிகெட்ட மனைவி ...	1	0
கோமளம் குமரியானது ...	0	12
ஸ்ரீமாமிகொலு	0	8
தலையணை மந்திர உபதேசம்	0	8
திக்கற்ற இரு குழந்தைகள்	1	4
பண்டிதை விசாலாக்ஷியம்மாள் போட்ட		
லலிதாங்கி	0	8
சுஜாதா	0	8
வனசுதா	0	8

சந்திரகாந்தா

ஓர் இனிய துப்பு அறியும் தமிழ் நாவல். "இராஜாம்பாள்" போலவே இருக்குமென்பதில் யாதொரு தடையு மில்லை. இந்த நாவலானது இராஜாம் பாளை எழுதிய ஜே. ஆர். ரங்கராஜா அவர்களால் எழுதப்பட்டது. இதிலும் ஆர்ட்பேப்பர் என்னும் நிகரற்ற வளவ ளப்பான கடிதத்தில் அச்சடித்த மூன்று சித்திரப்படங்கள் கோர்க்கப்பட்டிருக்கி ன்றன. இதுவும் ஒவ்வொருவர் கையி லும் இருக்கவேண்டியது அவசியம்

இப்போது ஆர்டர்கள் ரிஜிஸ்டர் செ ய்யப்படுகிறது. அச்சிலிருந்து கூடிய ஜல்தியில் வெளியாகும்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி உடனே தங்கள் பெயர்களை ரிஜிஸ் டர் செய்துகொள்ளலாம்.

'தென்னிந்திய விவசாயம்'

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

	ரூ.	அ.	பை.
விவசாய விளக்கம்	1	4	0
தென்னை	1	0	0
கரும்பு	1	0	0
நெல்	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பேன்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,

தென்னிந்திய விவசாயம்,

வண்ணாரப்பேட்டை, சென்னை.

The South Indian Mills Co., Ltd.
TINNEVELLY.

தேன் இந்திய மில்ஸ் கம்பேனி (லிமிடெட்)

திருநேல்வேலி

மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெருமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு யெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெய் ஆகஸ்ட்டுமீ முதல் ஷை கம்பெனியில் கிடைக்கும்.

THE COMPLETE LETTER WRITER

2nd Edition Revised and Enlarged.

BY

Hari Charan Das.

Price Re. 1. *(full cloth, Gilt.)*

A Universal Cuide to the Art of Letter writing for all positions of Life.

It contains Chapters on :—1, Notes and general Information 2, Private Correspondence, 3, Receipt forms, 4, Bill forms. 5, Municipal Office, 6, Post Office department, 7, Postal department, 8, Income tax Office, 9. Railway Office, 10, Police Office Correspondence 11, Enquiring about a missing article on the Tram-car, 12, Medical department, 13, Collector's Office Correspondence, 14, Correspondence with Attorneys, Vakils, Muktears etc., 15, Correspondence with Doctors, 16, Steamer Correspondence, 17, News paper Correspondence, 18, Commercial and Govt. Office Correspondence, 19, Miscellaneous Applications and forms, 20, Abbreviations and Daily Wages.

A copy of this book will dispense with the necessity of seeking the help of others for writing Letters, Applications, etc,

To be had of—**M. L. DAS CO.,**

122, *Baitakkhana Road, Calcutta.*

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பெயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி,

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 42. A. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளதுமான ஸ்காந்தமல்லாத **(Non Magnetic)** சர்தார் **(Sirdar)** லீவர் ரூபாய் 12, வெள்ளி 18.

Oxydised ரூ. 14.



நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத **(Non Magnetic)** **(Lever)** லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

நெ. 101.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிவ்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு	3	0	0
,, 1	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளதுமான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்டயம் ஸ்டாம்பு	5	0	0
,, 104.	வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள்சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளதுமான ஹண்டிங்க் கெடியாரம்	12	8	0
,, 10.	வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும், 15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம்	16	0	0
,, 108.	வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல் சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் ½-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது	20	0	0

N. B.—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய கம்பெனியாரால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன்னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக் கம்பெனியில் கிடைக்கும். கேட்டால் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒரு வெல்வெட் பெட்டி ஒரு கண்ணாடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், காரண்டி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed by G. C. Loganadham Bros, at the Guardian Press, Mount Road, Madras

Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . .
AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

1 } சௌமியஹூ மார்கழி மூ 1உ
1909ஹூ டிசம்பர்மூ 15உ { Part. 9
பிரதி. 9

tents

பொருளடக்கம்

ton ...	129	பருத்திப்பயிரைக்கலப்பீத்தல்	129
... ...	132	வெக்கை ...	132
.. ...	135	போரடித்தல் ...	135
.. ...	137	பழமொழிகள் ...	137
...gricultural	138	விவசாய இலாகா நோட்டீஸ்	138
Transplanting	139	நெல் விதைப்பும் நடுகையும் ம-া-া-ஸ்ரீ, ராவ் பகதூர் ஜே. தர்மரங்கராஜு காரு	139
...perations ...	141	தோட்டப்பருவங்கள் ...	141
...oks	142	புத்தகவரவு ...	142
...'s Dung ...	143	வௌவால் மலத்தின் உபயோகம் ...	143
...	143	குறிப்புகள் ...	143
N... Op... ...	144	மார்கழிமாதத்தியபருவங்கள்	144

வருஷ...சந்தா த...பால்கூலி உள்பட அணா 12
...Annual Subscr...ption I...cluding Postage As. 12 only

Edited and Published by
J. R. RANGA RAJU,
5, Mount Road, Madras

[All Rights reserved]

நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் தவறாமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெறாவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்கு பத்திரிகை சேராத விஷயம் தெரிவித்தால் அந்தந்த தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையுமனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தயவுசெய்து விலாசத்தின்மேல் எழுதியிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும் அச்சடித்திருக்கும் Register No. M. 801 என்பதை எழுதிவிடக்கூ[illegible] என்பதை கவனிக்கக் கோருகிறோம்.

"கிருஷிகன்" சித்திரை ஆடி, ஐப்பசிமாதங்களின் சஞ்சிகை[illegible] வாகிவிட்டதால் இனிமேல் இவ்வருஷத்தில் சேரும் சந்தாதாரர்க[illegible] மூன்றுபிரதிகளும்கொடுக்கமுடியாது. எழுதிய கடிதங்களுக்குப் ப[illegible] க்க வேண்டுமானல் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்புகளாவது அனுப்பவே[illegible]

மா[illegible]

கிருஷிகன்[illegible]

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரி[illegible] யானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்ய[illegible] தப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்[illegible] சாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ண[illegible] மும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்[illegible] ந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்கு[illegible] அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சி[illegible] ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைக் கூடுமானவரையில் சப்[illegible]

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு } ...

வி. பி. கமிஷன் அணா 1-பிர[illegible]

தனிப்பிரதி ... ... 0[illegible]

மற்ற அயல்தேசங்களுக்கு தபால்கூ[illegible]திரம் பிரத்தியேகம[illegible]

வேண்[illegible]ள்

ரங்க ராஜ[illegible] அண்டு பிரதர்ஸ்,

[illegible], மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

தயாராகிவிட்டது! காப்பிக்குமுந்துங்கள்!!

தாமதிக்காதீர்கள்

சந்திரகாந்தா

ஓர் இனிய துப்பு அறியும் தமிழ் நாவல்.

இதைப்போலொத்த சிறந்த நாவல் இதுவரையில் பிரசுரிக்கப் படவில்லை யென்பது இதைவாசித்த எல்லோருடைய அபிப்பிராயம். கண்டோர்மனதைக்கவரும் மூன்று சித்திரப்படங்களுடன் கூடியது. இந்த நாவலானது "இராஜாம்பாள்" எழுதிய ஜே. ஆர். ரங்கராஜா அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணு 12.

தபால்கூலி வி. பி. கமிஷன் அணு 3 பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்கராஜ- அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி உடனே வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

"Rajambal"

கேட்ட உடன் சந்தோஷத்தையும்,

பார்த்த உடன் ஆநந்தத்தையும்,

வாசித்த உடன் மனோ உற்சாகத்தையும்,

முடித்த உடன் வியப்பையும்

கொடுக்கும் நாவல் எது?

"இராஜாம்பாள்"

என்னும் துப்பு அறியும் நாவல்

ஒன்றுதான்.

கண்டோர் மனதைக்கவரும் மூன்று சித்திரப் படங்களுடன் கூடியது.

விலை அணா 12.

தபால் கூலி வி. பி. கமிஷன் அணா 2 பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 1 புத்தகம் 1	சௌமிய௵ மார்கழி௴ 1௳ 1909௵ டிசம்பர்௴ 15௳	No. 9 பிரதி 9

பருத்திப்பயிரைக் கலப்பித்தல்

THINNING OF COTTON

பருத்தி சாகுபடி செய்வதில் கவனிக்கவேண்டிய விஷயங்களில் 'பயிர்கலைத்தல்' மிகவும் முக்கியமானது. சாதாரணமாய்த் திருநெல்வேலிப் பஞ்சு மற்ற ஜில்லாக்களில் கிடைக்கும் பஞ்சைவிட அதிக விலைக்கு விற்கப்படுகிறதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த ஜில்லாவில் சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களின் தூண்டுதலினால் அனேகர் பருத்தியைச் சால்விதைக் கலப்பைகொண்டு விதைத்துப் பயிர்செய்யத் துணிந்திருக்கிறார்கள். இப்படி சால்விதைக் கலப்பைகொண்டு விதைத்ததினால்மட்டும் நல்ல மாசூல் ஒருவருக்குக் கிடைத்துவிடுமென்று எண்ணிவிடக்கூடாது. சால்விதைக் கலப்பைகொண்டு விதைப்பதுடன் அவர்கள் கவனித்துச் செய்யவேண்டிய அனேக விஷயங்களில் பயிர்கலைத்தலும் ஒன்று. தற்காலத்தில் சால்விதைக் கலப்பைகொண்டு விதைத்திருக்கும் கிராமங்களில் அனேக குடிகள், பயிர் கலைக்கவேண்டிய அவசியமில்லையென்றும், அப்படிக் கலைத்தால் நஷ்டம் ஜாஸ்தியாய் உண்டாகுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். மேலும் சால்விதைக் கலப்பைகொண்டு விதைக்கும்போது பயிர் வரிசைகளினூடே சுமார் $1\frac{1}{2}$-அடி நிலம் காலியாய்க் கிடக்கிறதென்றும் அந்தக் காலியிடத்தில் சில செடிகளிருந்தால்

அவைகளில் வரும் பலனும் கிடைக்கக்கூடுமென்றும் நினைக்கிறார்கள். இந்தக் காரணத்தைக்கொண்டே அனேகர் இன்னமும் சால்விதைக் கலப்பையைக் கையாடாமல் கைவிதைப்பாய் விதைக்கிறார்கள். இப்படி அவர்கள் நினைப்பது தப்பிதம். ஏனென்றால் பருத்தி பயிர் செய்யும் ஒவ்வொரு கிருஷிகருக்கும் செடிகள் நெருங்கி யிராமலும் ஒரு செடியின் கிளை மற்றொரு செடியின் கிளைமேல் படாமலுமிருந்தால்தான் நன்றாய்க் காய்க்குமென்றும் தெரியும். இப்படித் தெரிந்திருந்தும் கிருஷிகர் பயிரைக் கலைக்காமலிருப்பதின் காரணமென்னவென்று அவர்களுடன் கலந்து விசாரிக்கும்போது அவர்கள் சில முகாந்திரங்கள் சொல்லுகிறார்கள் சால்விதைக் கலப்பைகொண்டு பருத்தி சாகுபடி செய்யும் கடப்பை, கர்நூல், அனந்தபூர், பல்லாரி ஜில்லாக்களிலும் கூடப் பயிரைச் சரியான படி கலைப்பதில்லை. தென் ஜில்லாக்களில் நல்ல பருத்தி சாகுபடியாகும் திருநெல்வேலி ஜில்லாவில் பருத்தி விதைப்பதில் ஒரு நூதன வழக்கம் காணப்படும். நிலம் விதைக்கத் தயாராயிருக்கும்போது விதையை விதைத்து ஒருதரம் உழுது, அதன்மேல் மற்றொரு தரம் விதைகளை வீசும் வழக்கமிருக்கிறது. ஆகவே பருத்தி விதையை இந்த ஜில்லாவில் இரண்டுதரம் விதைக்கிறார்கள். அதனால் பயிர் நெருங்கிவிடுகிறது. கிருஷிகரிடம் இப்படி என் விதைக்கிறீர்கள் என்று கேட்டால், அவர்கள் அப்படி விதைக்கவேண்டியது அவசியந்தானென்று சொல்லுகிறார்கள். விதைத்தவுடன் மழைகள் ஜாஸ்தியாய்ப் பெய்தால் முதல் விதைத்து மூடிய விதைகள் ஜாஸ்தி ஈரத்தினால் முளைப்பதில்லையென்றும், இரண்டாந்தரம் விதைத்து மேல் பரப்பில் விழுந்துகிடக்கும் விதைகள்மட்டும் முளைக்குமென்றும், அப்படி விதைத்தவுடன் மழைபெய்யாமல் வெயில் அடித்துக்கொண்டிருந்தால் மேல் பரப்பில் விழுந்த விதைகள் முளைக்காமல் முதல் விதைத்து ஆழத்தில் புதைந்த விதைகள் மாத்திரம் முளைக்குமென்றும், இரண்டுதரம் விதைக்காவிட்டால் ஒருவகையில் அல்லது மற்றொருவகையில் பயிர் முளைக்காமல் கெட்டுப்போய்க் காலி இடம் அதிகமாய்க் கிடக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். அனேகமாய்ச் சாதாரண வருஷங்களில் இரண்டுதரம் விதைத்த விதைகளும் முளைத்துப் பயிர் அடர்ந்து இளம்பயிரில் பார்க்கும்போது பயிர் கண்ணுக்கு அழகாயிருப்பதைப் பார்த்து அனேக கிருஷிகர் சந்தோஷப்படுகிறார்கள். "அடர்த்தியை அப்போது பார்; புழக்கத்தைப் பின்னாலே பார்" என்னும் பழமொழியைச் சற்றுவது கவனிக்காமல் பயிரை அடர்த்தியாய் விட்டுவிடுகிறார்கள். விவசாய விஷயங்களில் அனுபோகமுள்ள யாராவது பயிரைக் கொஞ்சம் கலைத்துவிட்டால் அது நன்றாய்க் காய்த்து வெடிக்குமென்று சொன்னால், கிருஷிகர் "அட படுபாவி! நான் கலைக்கவேமாட்டேன், பிள்ளையை வளர்த்ததுபோல் வளர்த்து இப்

போது பயிரைப் பிடுங்கச்சொல்லுகிருயே! நீ என்ன பாவத்தில் போகமாட்டாய் !!" என்று சொல்லுகிறார்கள். இது தப்பு. ஏனென்றால் மேல்சொன்னபடி இரண்டுதரம் விதைத்த பயிர்களில்கூட அனேக வருஷங்களில் ஜாஸ்தி மழையினாலோ அல்லது மழையில்லாமையினாலோ அல்லது பூச்சி புழுக்களின் கெடுதிகளினாலோ பயிர் சரியாய் முளைக்காமல் கொஞ்சமாய் செடிகள் முளைக்கின்றன. அப்பால் காலியிடங்களில் விதைக்கும் விதைகள் சரியானபடி முளைத்து ஒங்குவதில்லை. முன் கூட்டியே கலக்க விதைத்த செடிகள் நன்றாய்க் கிளைத்து வீரியமாய் வளர்ந்து, காய்த்து, சுளைகள் வெடித்து அதிகமாய்ப் பலன் தந்திருக்கிறதை ஒவ்வொரு கிருஷிகரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இது அவர்களுக்குத் தெரிந்திருந்தும் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் பாவமென்றுங் களைவெட்டும்போது அவைகள் தற்செயலாய் எடுபட்டுப் போனால் போகட்டுமென்றும் சொல்லுகிறார்கள். இந்தப்பயிர் கலைத்தல் சரியான காலத்தில் செய்யாமல் களைவெட்டும்வரை பயிர் நெருங்கியிருக்க விட்டுவைத்திருந்தால் அப்படி நெருங்கியிருக்கும் செடிகள் எல்லாம் நிலத்தின் கீழுள்ள ஈரப்பதத்தை வெகு சீக்கிரத்தில் கிரகித்து ஆவியாய்ப் போக்கிவிடும். அதனால் குறிப்பிட்ட காலத்துக்கு முன்கூட்டியே பயிர் காய்த்து வெடித்து உலர்ந்துவிடும். இதனால் செடிகளின் வலிமை குறைந்து மாசூல் குறைவதுமல்லாமல், பயிர் குறுகி கட்டை இழையுள்ள கேவலமான பருத்தியைக் கொடுக்கும். பின்மழைகள் சரியாய்ப் பெய்தால் எல்லாச் செடிகளும் செழித்து வளர்ந்து அதிகமான மாசூலைத் தருமென்றும், சிலர் சொல்லுகிறார்கள். பயிர் கலைத்தல் பாவமென்று நினைக்கும் ஜில்லாக்களில் சோளம், கம்புப்பயிர்கள் சாகுபடி செய்யும்போது மாத்திரம், அவைகள் சுமார் இரண்டு அடி உயரம் வளரும்போது, ஒவ்வொரு செடிக்குச் சுற்றிலும் போதுமான இடமிருக்கவேண்டுமென்று உத்தேசித்துப் பயிர் வளர்ந்து வரும்போது அப்போதைக்கப்போது சிறிதாயிருக்கும் சோளச்செடிகளைப் பிடுங்கி அவர்கள் கால்நடைகளுக்குத்தீவனமாக உபயோகப் படுத்துகிறார்கள். இப்படிச் சோளப்பயிர், கம்புப்பயிர் பிடுங்கிக் களைவது பாவமில்லை என்று நினைக்கும் கிருஷிகர் இந்தப் பருத்திப்பயிரைப் பிடுங்குவது மாத்திரம் பாவம் என்று நினைப்பது தப்பான காரியம்.

திருநெல்வேலி ஜில்லாவில் முக்கியமாய்ப் பருத்திப்பயிர் கார்த்திகை மாதம் 10-வக்குள் விதைப்பாயிருக்கும். அப்படிப்பட்ட பயிர்களைக் கலைக்க இது நல்ல தருணம். சால்விதையில் விதைத்திருப்பவர்களுக்கு இதுதான் தருணம். ஆகையால் பருத்தி சாகுபடி செய்திருக்கும் ஒவ்வொருவரும் காலதாமதமின்றி சரியானபடிப் பருத்தியைக் கலைப்பித்து பலனடைவார்களென்று நம்புகிறோம்.

வெக்கை

RINDERPEST

சென்றசஞ்சிகையில் வெக்கையின் ஆரம்பக் குறிகளை எழுதினோம். இந்தச் சஞ்சிகையில் அந்தவியாதி எப்படி விர்த்தியடைகிறதென்பதையும் அதற்குச் செய்யவேண்டிய சிகிச்சை முதலியவைகளைப்பற்றியும் எழுதுவோம்.

இந்தவியாதி கொஞ்சம் முதிர்ந்தவுடன் கால்நடைகளின் திரேகம் பூராவும் சிலவேளைகளில் சூடாகவும் சிலவேளைகளில் குளிர்ந்தும் இருக்கும். மூச்சு துரிதமாய்வரும். இரை தின்னாது. அசைபோடாது. கண்ணீர்விட்டு அழும். முதுகைத் தொட்டாலுங்கூட வலியிருப்பதாய்க்காட்டும். அதிகவருத்தத்துடன் படுக்கும். தலையை விலாப்பக்கத்தில் திருப்பிவைத்துக்கொண்டு கிடக்கும். இருந்தாற்போலிருந்து கடுங்காய்ச்சல் உண்டாகும். தண்ணீர்த்தொட்டியை நோக்கி அடிக்கடிபோகும். ஆனால் தண்ணீர் குடிப்பதில் அதிக வருத்தப்படும். முன்சொன்ன வலிப்பு இப்போது அதிகப்படும். நாடி படபடப்பாயும் ஒழுங்கில்லாமலும் அடிக்கும். இருந்த இடம் விட்டுப் பெயரவும் வருத்தப்படும். நாக்கும் கன்னங்களின் உட்பக்கமும் ஈறும் அதிகமாகச்சிவக்கும். நாக்கின்மேல் துர்நாற்றத்துடன் கூடிய ஒரு வகையான அழுக்குப் படிந்திருக்கும். சாணிபோட அதிக வருத்தப்படும். சாணி கல்போல் கட்டிப்பட்டு உடைந்து துண்டுதுண்டாய் விழும். அதில் சீதமும் இரத்தமும் கலந்திருக்கும்.

அப்பால் கண்ணீர் அதிகமாய் வடியும். மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் பிசுபிசுப்பான நீர் வடியும். துர்நாற்றமான சுவாசம் விடும். ஈறுகளிலும் வாய்க்குள்ளும் புண்ணுண்டாகி மஞ்சள் நிறமாகத்தோன்றும். முன்வாயிலுள்ள பற்கள் சில சமயங்களில் ஆடிப்போகும். இப்படியாகும் ஸ்திதியில் மலபந்தம் நீங்கிக் கழிச்சல் ஆரம்பிக்கும். முதலில் பேதியும் சாணித்துண்டுகளும் இரத்தமும் சீதமும் கலந்து விழும். பின் பேதியும் சீதக்கட்டும் இரத்தமும் கலந்துபோகும். கடைசியாய் இரத்தமும் இரணமான குடல் சதைத்துண்டுகளும் அதிக துர்நாற்றத்துடன் விழும். மூத்திரம் இரத்தம்போல் சிவந்த நிறமாய் இருக்கும். சில சமயங்களில் இரத்த மூத்திரம் வெளியாவதுமுண்டு. உடம்பில் காற்று உள்ளடங்கி வீக்கங்கள் இருப்பதாகத் தோன்றும். இந்த ஸ்திதியில் ஆயாசம் அதிகமாயிருக்கும். தண்ணீரைப்பார்த்து அடிக்கடி இழுக்கும். தண்ணீர் வைத்தால் அதில் ஆவலுடன் வாய் வைத்துக் குடிக்கப் பிரயாசப்படும். ஆனால் குடிக்கமுடியாது. இருமல் அடிக்கடி உண்டாகும். உடம்பெல்லாம் குளிர்ந்துவிடும். படுத்த கிடையிலிருந்து எழுந்திருக்க முடியாமல் கிடக்கும். வருத்தத்துடன் மூச்சுவிடும். வருத்தத்துடன் முறுகும்

சத்தம் குறட்டை விடுவதுபோல் கேட்கும். இரத்தம் கலந்த பேதி தாணுய்ப்போகும். இந்த ஸ்திதியில் நாடி பார்க்கவே அகப்படாது. சந்துகளிலும் பால் மடியிலும் கொப்புளங்களும் சிவப்புப் புள்ளிகளும் தோன்றும். பேதி அதிகமாய் ஆவதினுல் ஆயாசம் உண்டாகிக் கடைசியில் மரணம் நேரிடும்.

சாதாரணமாக இவ்வியாதி கண்ட கால்நடைகள் 3-நாள் முதல் 9-நாளுக்குள்ளும் அதிகக் கொடூரமாய் வியாதிதாக்கினுல் ஒருநாளிலும் மரணம் அடையும். 15-நாள்வரையில் வருத்தப்பட்டு மரணமடைவதுமுண்டு. இந்த வியாதிகண்ட கால் நடைகள் அநேகமாய் மரணமடைகின்றன. பிரயாசை எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு 20-முதல் 50-வரை பிழைத்துத் தேறுவதுமுண்டு.

சந்துகளிலும் விலாவிலும் கொப்புளங்களுண்டாகாமல் சீதபேதி அதிகக் கொடூரமாய் உண்டானுல் மாடுகள் பிழைப்பதில்லை. சீக்கிரத்தில் மரணமடையும். சீதபேதிமட்டாகவும் உடம்பெங்கும் கொப்புளங்கள் அதிகமாகவும் இருந்தால் அனேகமாய் அவைகள் பிழைத்துத்தேறும் என்று சொல்லலாம். இது எல்லாரும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய காரியம். கொப்புளங்கள் அதிகமாகக் காணப்பட்டால் அந்தக் கால்நடைகளை அதிக ஜாக்கிரதையுடன் காப்பாற்ற முயலவேண்டும். கூடிய சிகிச்சை முற்றும் சரிவரச்செய்யவேண்டும். அப்படியில்லாமல் கொடூரமான சீதபேதி கண்டு மாடுகள் எழுந்திருக்க சக்தியில்லாமல் விழுந்து கிடக்குமானுல் அவைகளுக்குச் சிகிச்சை செய்வதில் பிரயோஜனமில்லை. சிலவேளைகளில் கொடுமையாக இந்த வியாதி தாக்கும்போது கால்நடைகளுக்கு ஜன்னியுண்டாகி பைத்தியம் பிடித்ததுபோல இங்கும் அங்கும் ஓடிப்பாய்ந்து திடீரென்று கீழே விழுந்து ஸ்மரணையற்று பிராணனைவிடும். இப்படிப் பட்ட கால்நடைகளுக்கு ஒன்றும் செய்யமுடியாது.

இந்த வியாதி ஆரம்பத்திலேயே கொடூரமாய் வராமல் கொஞ்சம் லேசாயிருக்குமானுல் அதற்கு உடனே தக்க சிகிச்சை செய்யவேண்டும். முதலில் உண்டாவது மலபந்தம், ஆகையால் அதை நீக்குவதற்கு பேதிமருந்துகள் உடனே கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுக்கவேண்டும். கொடூரமான மருந்துகள் கொடுக்கக்கூடாது. கரியுப்பு அல்லது Epsom salt என்னும் பேதியுப்பை வேளைக்கு 4-ரூபா எடையாக இளஞ்சூடாயிருக்கும் வடிகஞ்சியில் கலந்து ஒருநாளைக்கு இரண்டு பொழுது வருத்தமில்லாமல் லேசான பேதியுண்டாகும் வரை கொடுக்கவேண்டும். இத்துடன் அரை ரூபாய் எடையுள்ள கொய்னு மருந்தை ஒவ்வொரு வேளையும் கஞ்சியில் கலந்து கொடுப்பதும்நன்மையாகும். இது எல்லாத்தபால் ஆபீஸ்களிலும் கிடைக்கும். கொய்னு கிடைக்கவில்லையானுல் முற்றின வேப்பமரத்துப்பட்டையைக் கொண்டுவந்து கஷாயம் போட்டுக் கொடுக்கலாம். இரத்தம்

அல்லது சீதம் கலக்காமல் பேதியுண்டானல் வியாதி மடங்கி குணக் குறியுண்டாயிற்றென அறிந்துகொள்ளலாம்.

அப்படியில்லாமல் கழிச்சலும் சீதம் இரத்தம் கலந்தபேதியும் உண்டானல், அப்படி யுண்டாகி ஒருநாள் முழுவதும் கழிந்த பிற்பாடு, துவர்ப்பான மருந்துகளைக் கொடுக்கவேண்டும்.

பொடிசெய்த சீமைச்சுண்ணும்பு $2\frac{1}{2}$-ரூபா எடை, காசுக்கட்டி பொடி $1\frac{1}{4}$-ரூபா எடை, அல்லது மாயக்காய்த்தூள் $1\frac{1}{4}$-ரூபா எடை, சுக்குப்பொடி $1\frac{1}{4}$ரூபா எடை, தென்னம்பூரிச்சார் அரையாழாக்கு, அபீன்3-அரைக்கால்ரூபா எடை,மாதுளங்காய்த்தோல் 1ரூபா எடை, நாட்டுச்சாராயம் அரைவீசம்படிஇவ்வளவையும் நகச்சூடாயிருக்கும் அரைப்படி வடிகஞ்சியில் கலந்துகழிச்சல் நிற்கும்வரையிலும் காலையிலும் மாலையிலும்உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். இந்த மருந்துகளின் அளவில் நாலிலொருபங்கு கன்றுக்கும்,ஆறிலொருபங்கு ஆட்டுக்கும், பன்னிரண்டிலொருபங்கு ஆட்டுக்குட்டிக்கும் கொடுக்கவேண்டும்.

இந்த மருந்து கொடுத்து பேதி நின்றுபோனல் மருந்தை நிறுத்திவிடவேண்டும். இந்த வியாதி கண்டவுடனேயே கால்நடைகள் தீனி தின்னது. ஒருவேளை தின்பதாயிருந்தாலும் அவைகளுக்கு வைக்கோல், தட்டை முதலிய தீவனம் போடக்கூடாது. பச்சரிசிக்குறுநொய் அல்லது கம்பு கொஞ்சம் புளித்த காடித் தண்ணீரில் நனைத்து இடித்து நன்ருய்க் காய்ச்சி ஆறவைத்து கொஞ்சம் உப்பும் கால் ரூ. எடை அன்னபேதியும் அரை ரூ. எடை நிலவேம்புத்தூளும் கலந்து பிரதிதினமும் காலையிலும் மாலையிலும் கொடுத்து வரவேண்டும். மலச்சிக்கல் நிவர்த்தியாகிப் பேதி ஆரம்பமான பின்னும் இந்த ஆகாரந்தான் கொடுத்துவரவேண்டும். வியாதி தீர்ந்து குணப்பட்டு வரும்போது கொஞ்சம் இளம்புல் போட்டுவரலாம். இதைத்தவிர வேறு ஆகாரம் கொடுக்கவே கூடாது.

இந்த வியாதி கண்டவுடனே மலச்சிக்கல் இருக்கும் வரையிலும் கால் நடைகளுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அவ்வளவும் வைக்கலாம். பேதி ஆரம்பமாகிவிட்டால், தண்ணீரைக் காய்ச்சி நகச்சூடாயிருக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாய் வைக்கவேண்டும். இரண்டுமணி நேரத்துக்கொருதரம் அரைப்படி வெந்நீருக்கு அதிகம் கொடுக்கக்கூடாது. வெந்நீர் கொடுப்பதைவிட நீர்மயமாய்க் காச்சிய கஞ்சித் தண்ணீரை வைத்துவந்தால் மெத்த நலம்.

மழை காலத்திலும் பனிகாலத்திலும் வாடைகாலத்திலும் இவ் வியாதி கண்ட கால்நடைகளுக்குக் கனத்த கம்பளி போர்த்து தேகத்தில் சூடு தங்கும்படி காக்கவேண்டும். இவைகளுக்குச் சரியான ஆகாரம் கொடுத்துப் போஷித்து அவைகளின் பலம் குறையாமல் காப்பதுதான் அதிக முக்கியமான விஷயம்.

போரடித்தல்

THRESHING GRAIN

பல்லாரி விவசாய டிப்டி டைரெக்டரவர்கள் கல்லுருளைகொண்டு போரடிப்பதைப்பற்றிச் சில விஷயங்களைக் கிருஷிகரின் நன்மைக்காக வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விராஜதானியில் போரடித்தல் மூன்று விதமாய்ச் செய்யப்படுகிறது. (1) கதிர்களைக் களத்தில் வட்டமாகப் போட்டுக் கால்நடைகளை வரிசைவரிசையாய்ப் பிணைத்து அவைகளை வட்டத்தின்மேல் சுற்றிச்சுற்றி ஓட்டிக்கதிர்களை மிதிக்கச் செய்தல். (2) கதிர்களைப் பூமியில் பரப்பித் தடிகளைக் கொண்டு அடித்து தானியத்தைப் பிரித்தல். (3) பாதைகளில் கப்பிபோட்டு கெட்டிக்கும் உருளைக்கல்லை வடஜில்லாக்களில் பெரிய கதிர் அரிகளின்மேல் இழுத்துத் தானியத்தை உதிர்த்தல். கடைசியில் சொன்ன இம்முறையானது எல்லாத் தானியங்களையும் போரடிக்கப் பொருந்தாது. மெதுவாயும் மெல்லிதாயுமிருக்கும் தாள்களையுடைய நெல், தினை முதலிய பயிர்கள் அறுவடைசெய்து அக்கதிர்களின் மேல் உருளைக்கல்லை இழுத்தால் மெல்லிதான தாள்கள் பின்னிக்கொண்டு மெத்தைபோல் அடைசேர்ந்துவிடுவதால் அவைகளுக்கு இடையே அகப்பட்ட கதிர்களிலிருந்து தானியம் சரியாய் உதிர்வதில்லை. அந்தப் பிராந்தியங்களில் சாதாரணமாகச் சோளப்பயிர் போரடிப்பதற்கே இம்முறையை விசேஷமாக அநுசரிக்கிறார்கள். அதிலும் எல்லாவகைச் சோளக் கதிர்களையும் இப்படிப் போரடிக்க முடியாது. தென் ஜில்லாக்களில் சாகுபடியாகும் இருங்குச் சோளம் அறுவடை செய்யும்போது கதிர்களைக் குவித்துத் தடிகளைக்கொண்டு அடித்தே தானியத்தை உதிர்க்கவேண்டும். வேறு விதமாய்ச் செய்தால் தானியத்துடன் அதன் சக்கையும்கூடச் சேர்ந்துவரும். இருங்கு தவிர மற்ற சாதாரண சோளத்தினுசுகளை உருளைக் கல்லைக்கொண்டு போரடிப்பது எளிது. மேலும் மற்றவைகளைவிட இம்முறையில் நேரிடும் செலவும் மிகக் குறைவு.

முதல் முதல் இவ்வுருளைக்கல்லைக் கொண்டு போரடிக்கும்முறை எப்படியுண்டாயிற்றென்றால், 1876-ம்வூ முதல் 1878-ம்வூவரை யுண்டாயிருந்த கொடும் பஞ்சகாலத்தில் பாதை மராமத்து வேலைகள் நடந்துகொண்டிருந்தபோது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு இழுத்துக்கொண்டுபோன கல்லுருளை யொன்று போர்க்களத்தில் குவித்திருந்த சோளக் கதிர்களின்மேல் அகஸ்மாத்தாய் உருண்டு சென்றது. அப்போது அக்கதிர்களிலிருந்த தானியம் முழுவதும் உதிர்ந்துபோயிற்று. அதுகண்டு அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்த கிருஷிகர் இம்முறையைப் பரிக்ஷித்துப் பார்த்தனர். அது எளிதாய்ச் சோளத்தானியத்தை யுதிர்த்ததைக்கண்டு அம்முறையை அநுசரிக்கவே மற்றவர்களும் நாளாவட்டத்தில் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள் என்பதாக இறந்துபோன ம-ா-ா-ஸ்ரீ, இராவ்பஹதூர் C. K. சுப்பராவ் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இந்த உருளைக் கல்லானது சாதாரணமாகப் பாதைகளின் மராமத்தில் உபயோகப்படும் சிறு உருளைக்கல்லுக்குச் சமானமாயிருக்கிறது. அனேகவிடங்களில் அது ஒரு கெஜ நீளமும் $1\frac{1}{2}$-அல்லது 2-அடி குறுக்களவுமுள்ளது. அதன் கனம் சுமார் 1000-அல்லது 1500-இராத்தல் இருக்கும். இந்த உருளைக்கல ஒன்றைச் சாதாரணமாய் ரூ 10-முதல் 20-வரையில் வாங்கலாம். அனேக கிருஷிகர் சேர்ந்து கூட்டாக ஒரு உருளைக்கல்லை விலைக்கு

வாங்கி வைத்துக்கொண்டு அவசியமானபோதெல்லாம் ஒவ்வொருவராய் உபயோகித்துக்கொள்ளலாம்.

இம்முறையில் கதிர் கொய்வதும் காயவைப்பதும் எப்போதும்போல் தான் செய்யவேண்டும். ஜாஸ்தியான தானியக் கதிர்கள் போரடிக்க வேண்டியதாயிருந்தால் தாள்களிலிருந்து கதிர்களைக் கொய்து வட்டமாக சுமார் 8-அங்குல உயரத்துக்குப் பரப்பி அதன்மேல் முன்சொன்ன கல்லுருளையைச் சுற்றிச்சுற்றி இழுக்கவேண்டும். இப்படி பல தரம் இழுக்கும்போது தானியம் கதிரினின்று உதிர்ந்துவிடும். உருளையை ஒருதரம் இழுத்தவுடன் வேலையாட்கள் தூரட்டிக் கம்புகளால் கதிர்களைக் கலைத்துவிடுவார்கள். இப்படிச் செய்வதால் உதிராதிருந்த ஒன்றிரண்டு கதிர்களிலுள்ள தானியமும் உதிர்ந்துவிடும். தானியம் மாவாக அரைபட்டால் அடிக்கடி கதிர்களின்மேல் கொஞ்சம் தண்ணீர் தெளிக்கிறார்கள். இவ்விதமாக உருளைக்கல்லை அனேகந்தரம் இழுத்தவுடன் தானியம் கீழேபோய்விடுகிறது. கதிர்ச் சக்கைமட்டும் மேலே யிருக்கிறது. இதற்குப்பின்னும் அரைக்கால் பங்கு தானியம் கதிர்களில் ஒட்டிக்கொண்டு தானிருக்கும். இதைத் தடிகளால் அடித்து உதிர்க்கிறார்கள். அதிகமாயிருந்தால் மாடுகளைக்கொண்டு மிதிக்கச் செய்கிறார்கள். ஜாஸ்தியான கதிர்களைப் போரடிக்கவேண்டியதா யிருக்கும்போது இரண்டுஜதைக் கால்நடைகளைப் பூட்டி ஒரு உருளைக்கல்லை இழுக்கச் செய்து, அதன் பின்னே நாலு கால்நடைகளை ஒன்றாய்ப் பிணைத்த இரண்டு பிணையல்களை ஒன்றின்பின் ஒன்றாய் ஓட்டுவதால் தானியம் வெகு சுளுவாகப் பிரிக்கப்படும். சாதாரணமாக உருளைக்கல்லைமட்டும் இழுப்பதால் போரடிக்கும் தானியத்துக்கு நான்கு மடங்கு தானியத்தை இவ்விதமாகப் போரடிக்கலாம்.

பல்லாரியில் வெள்ளைச் சோளக்கதிர்களைப் போரடிப்பதில் பரிக்ஷை நடத்திப் பார்த்ததில் கால்நடைகளால் பிணையலடித்ததில், 4552-இராத்தல் தானியம் போரடிக்க பத்து கால்நடைகளும் எழு மனிதர்களும், இரண்டு பையன்களும் வேலை செய்யவேண்டியதாயிருந்தது. அதற்குச் சென்ற செலவு ரூபா 4—2—0 ஆயிற்று. உருளைக்கல்லை உபயோகித்ததில் 9812-இராத்தல் தானியம் போரடிக்க 5-கால்நடைகளும், 11-மனிதரும், 2-பையன்களும் வேலை செய்தார்கள். இதற்குச் சென்ற செலவு ரூபா 3-10-0 ஆயிற்று. ஆக 1000-இராத்தல் தானியம் போரடிக்கப் பிணையல் அடித்ததில் 14 அணா 6 பைசாவும் உருளைக்கல் உபயோகத்தால் 5-அணா 11-பைசாவும் செலவாகிறது. இவைகளை ஒப்பிடும்போது ஐந்துக்கிரண்டாகிறது.

கடப்பை ஜில்லாவில் புரொத்தட்டூர் தாலூகாவில் முதல் முதல் இம்முறை அனுஷ்டானத்துக்கு வந்ததிலிருந்து அதிக சீக்கிரமாய்ப் பரவவில்லை. இதற்கு முக்கியகாரணம் என்னவென்றால் கல்லுருளை வாங்குவதற்குப் பிடிக்கும் செலவுதான். அனேக கிருஷிகர் சேர்ந்து ஒரு உருளைக்கல்லை வாங்கிக்கொள்வதால் இந்தத் தடங்கலை நிவர்த்திக்கலாம். கல்லுருளையை உபயோகிப்பதில் அதிக ஆட்கள் அவசியம் என்பது இன்னொரு ஆக்ஷேபனை. என்றாலும் மொத்தத்தில் செல்லும் செலவு குறைவாதலால் நாம் அதையேதான் கவனிக்கவேண்டும். இந்த அனுகூலங்களைக் கிருஷிகர் இப்போது வரவரத்தெரிந்துகொண்டு அனேகர் இம்முறையைக் கையாடத் தொடங்கியிருக்கிறார்கள். இதை வாசிக்கும் தென்ஜில்லா கிருஷிகர் சோளக்கதிர் அடிக்கும்போது இம்முறையைப் பரிக்ஷித்து அதன் அனுகூலத்தை அடையவேண்டும்.

பழமொழிகள்

OLD SAYINGS

"பசு ஊரத்திலும் பழம் புழுதி நல்லது" என்று ஒரு பழமொழியுண்டு. இதனால் ஒரு வயலில் தொழு எருவைப்போட்டுப் பயிரிடுவதைப் பார்க்கிலும், அதை அனேகந்தரம் உழுது காற்றாடவிட்டு வைத்திருந்தால் அந்தப் பழம் புழுதியில் பயிர் அதிகச் செழிப்பாய் உண்டாகும் என்று அர்த்தமாகும். இது அனேக விடங்களில் சரியாயிருக்கிறது. இதனாலேயே "உழவால் பயிராகிறது, எருவாலுமாகாது" என்னும் பழமொழி ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பழமொழியால் உழவு சரியாய் உழுவதால் உண்டாகும் பயன் எருவிடுவதால் கூட உண்டாகாது என்று அர்த்தமாகும். என்றாலும், இதனால் எவ்வகையான எருவிட்டாலும் உழவின் பயனையுண்டாக்க முடியாது என்று நினைக்கக்கூடாது. கொஞ்சமாக எருவிடுவதின் பயனைவிட நன்றாய் உழுவதின் பயன் அதிகம் என்று மட்டும்வைத்துக்கொள்ளலாம். ஒரு பயிருக்கு தழை எருவாவது, தொழு எருவாவது, பிண்ணாக்கு வகைகளாவது சரியான அளவுக்குப்போட்டால் அதினால் அதிகமான பலன் கிடைக்காமல் போகாது. இதைப்போலவே,

> "எழுழவு உழுதால் எருப்போடவேண்டாம்"
> "எருவிலும் வலியது உழவுதான் ஆமே"
> "ஊரத்தைத் தள்ளும் உழவு"
> "ஜாண் உழவு முழ எருவுக்குச் சமம்"

என்னும் பழமொழிகளும் வழங்கிவருகின்றன. இவைகளினால் நன்றாய் ஒரு வயலை உழச்செல்லும் செலவையும், அதற்குச் சரியானபடி எருவிடச்செல்லும் செலவையும் உத்தேசிக்கும்போதும், உழவினாலும் எருவினாலும் உண்டாகும் பயன்களை உத்தேசிக்கும்போதும் உழவானது எரு விடுவதைவிட இலாபகரமானது என்று அர்த்தமாகும். இந்தப் பழமொழிகளைக்கொண்டு எல்லாரும் தங்கள் நிலங்களுக்கு எருவிடாமல் நிறுத்திவிட்டு அவைகளைச் சில வருஷங்களுக்குச் சரியானபடி உழுதுமட்டும் வந்தால் சரியானபடி விளைந்துகொண்டுவரும் என்று நினைக்கக்கூடாது. இங்கிலாந்தில் Jethro Trul ஜெத்ரோ திருள் என்பவரும் ஹெல்விகிரில் என்பவரும் உழுவதனாலேயே நிலத்தின் வளத்தைக் குறையாமல் வைத்துக்கொள்ளலாம் என்றுசொல்லி அப்படியே பரிக்ஷை செய்தார்கள். அனேக வருஷங்களுக்குப்பின் நிலவளங் குறைந்து பயிர்களின் விளைவும் குறைந்துபோயிற்று. ஐந்தாறு வருஷங்களுக்கு இப்படி செய்துவந்தால் இப்பழமொழிகளின் வாஸ்தவமான அர்த்தம் இன்னதுதான் என்று செவ்வையாய் வெளியாகும். ஏனென்றால் அப்படிச்செய்தால் அதன் விளைவு வரவரக்குறைந்துபோகும் என்பதில் தடையில்லை. ஒருநிலத்திலுள்ள பயிருணவு திட்டமாய் ஒரு நிதானத்துக் குட்பட்டதாகவே இருக்கும். ஒரு பணப்பையில் ஆயிரம் ரூபாய் கட்டிவைத்துக்கொண்டு அதில் ஒவ்வொரு நாளும் கால்ரூபாய் எடுத்து மாற்றிச் செலவு செய்துவந்தால், நாளாவர்த்தியில் அந்தப் பையிலுள்ள ரூபாய்கள் குறைந்துகொண்டே வந்து, பின் ஒரு காலத்தில் அதில் ஒருகாசுகூட மீந்திருக்காமல் வெறுமையாகு மல்லவா? அதுபோல நிலத்திலுள்ள பயிருணவும் வருஷாவருஷம் பயிர் செய்வதால் நாளாவட்டத்தில் குறைவுபட்டு ஒருகாலத்தில் பயிர்களுக்கு விசேஷமாய் வேண்டிய பயிருணவு கொஞ்சமு மில்லாமல் போய்விடும். இப்படி வருஷா

வருஷம் நிலத்திற்குண்டாகும் பயிருணவின் நஷ்டத்தைச் சரிப்படுத்துவதற்காகத்தான் அதற்கு எருவிடுவது. இதனாலேயே "நிலத்தில் விளைந்த பயிர் நிலத்திலேயே மடியவேண்டும்" என்னும் பழமொழி ஏற்பட்டது. இதைக் கவனிக்கும்போது வருஷாவருஷம் எரு விடாமல் பயிரிட்டு வந்தால் நிலத்திலுள்ள பயிருணவு குறைவுபடும் என்பது வியக்தமாகும்.

உழுவதனால் நிலங்கள் கொஞ்சக் காலத்திற்குச் சரியான விளைவை எப்படி கொடுக்கின்றனவென்றால், நிலத்திலுள்ள பயிருணவு "பக்குவப்பட்ட உணவு" என்றும் "பக்குவப்படாத உணவு" என்றும் இரண்டுவகைப்படும். உழுவதனால் பக்குவப்படாத பயிருணவு பக்குவமடைகின்றது. இதைத்தவிர உழவு நூதனமாக நிலத்தில் பயிருணவை உண்டாக்குவதில்லை. பொக்கிஷத்தில் வெள்ளி நாணயம் இருக்கும் வரையில் அதை நிக்கல் செப்பு நாணயங்களாக மாற்றுவதனால் செலவிட உதவுவதுபோலும், வீட்டில் அரிசி இருக்கும் வரையில் அதை சமைப்பதினால் நமக்கு உணவு கிடைப்பது போலுமே, நிலத்தின் உழவினால் பயிர்கள் பயனடைவது. பொக்கிஷத்தில் வெள்ளி நாணயமில்லாதபோது தாழ்ந்த நாணயங்களாக மாற்றிச் செலவிட முடியாததுபோலும், வீட்டில் அரிசியில்லாதபோது சமயல் செய்வது கூடாமையாவதுபோலும், நிலத்தில் பயிர்களுக்கு அவசியமாய் வேண்டிய முக்கியமான பயிருணவுகளில்லாதபோது அதை உழுவதினால் யாதொரு பயனும் உண்டாகமாட்டாது என்பதை நமது நண்பர்கள் எல்லாரும் நன்றாய் அறியவேண்டும். இதற்குத் திருஷ்டாந்தமாக "ஏரோட்டுவதிலும் எரு விடுதல் நல்லது" என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

முன் சொல்லிவந்த பழமொழிகளுக்கும் இந்தப் பழமொழிக்கும் முரண் ஏற்படுகிறதேயென்று சிந்திக்கக்கூடாது. நாம் முன் விளக்கிக் காட்டிய பிரகாரம் கொஞ்சகாலத்துக்கு "உழவு உரத்தைத்தள்ளும்." அப்பால் எவ்வளவு உழுதாலும் எரு விடுவதைப் போன்ற பயன் உண்டாகாது. இந்தப் பழமொழிகளிலிருந்து எல்லாக் கிருஷிகரும் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் நிலத்தைச் சரியாய் உழுவதும் அவசியம், அதற்குச் சரியானபடி எரு விடவேண்டியதும் அவசியம். ஒன்றைச் செய்வதனால் மற்றொன்றை நிறுத்திவிடக்கூடாது,

விவசாய இலாகா நோட்டீஸ்

NOTICE OF THE AGRICULTURAL DEPARTMENT

விவசாய சீர்திருத்தங்களைப்பற்றிய அபிப்பிராயமும், ஒத்தாசையும் பெறவிரும்பும் கிருஷிகர், (1) டெப்டி டைரெக்டர் ஆப் அக்ரிகல்சர் வட இலாகா, பெல்லாரி, (2) டெப்டி டைரெக்டர் ஆப் அக்ரிகல்சர் தென் இலாகா, திருச்சினாப்பள்ளி, (3) பிரின்சிபால், அக்ரிகல்சரல் காலேஜ், கோயம்புத்தூர் என்ற இம்மூவரில் யாருக்காவது எழுதி யாதொரு விதமான செலவு இல்லாமல் இனாமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் பதிலுக்காக தபால் முத்திரைகளும் வைத்து அனுப்பவேண்டியது அவசியமில்லை.

M. E. கௌச்மான்
டைரெக்டர் ஆப் அக்ரிகல்சர்
சென்னை.

1909ளு டிசம்பர்மீ 4உ
சென்னை.

நெல் விதைப்பும் நடுகையும்

SOWING AND TRANSPLANTING OF PADDY

1. நேற்றுப் பெய்த மழைத்தண்ணீர்
நிலத்தில் நிற்கக் காணேமே;
ஆற்றில் வெள்ளப் பெருக்குண்டோ?
அருகில் நிலங்கள் நனைந்தனவோ?
. ஆர்த்து மின்னிப் பெய்தமழை
அடுத்து விதைக்கத் தக்கதுவோ?
பார்த்து வருவோம் வாருங்கள்
பயிர்செய் நமது நிலமெல்லாம்.
3. அண்ணு! இந்த வயல்தரிசு
அறக்காய்ந் திருக்குங் காரணமென்?
தண்ணீர் மேலுந் தங்கவில்லை!
தாழ்ந்து மண்ணிலு மீரமில்லை!!
4. நெடுங்கோ டையினல் கடுவெயிலில்
நிலங்காய்ந் துஜலம் வறண்டதுவோ?
கடுங்காற் றடித்து நிலத்திலுள
காற்பத ஈரமும் உண்டதுவோ?
5. பதத்தில் உழாத தரிசுநிலம்
பார்போல் இறுகி வலுத்தெந்த
விதத்துங் கொழுவு நுழையாமல்
மென்மேற் கடினம் மேவிடுமே.
6. ஓங்கிக் கனமழை பொழிந்தாலும்
உடனே மண்ணில் இறங்காமல்
தேங்கிக் கட்டி வழிந்தோடும்
தெட்டெனத் தண்ணீர் முழுவதுமே.
7. அண்ணு! ஆனல் எதற்காக
அங்கோர் கலப்பை கட்டுகிருர்?
கண்ணல் அதனைப் போய்ப்பார்த்து
கவனித் தறிவோம் வாருங்கள்.
8. கோடையில் உழவு செய்தநிலம்
கொழுமண் நெகிழ்ந்து மெதுவடையும்
ஆடியில் சிறுமழை பெய்தாலும்
அனைத்தும் மண்ணில் அமைந்திடுமே.
9. இதனல் உழுத இன்னிலத்தில்
இறங்கிய ஈரம் உழப்போதும்
பதமாய் முன்னே உழாதவயல்
பயனென் றடையா திம்மழையால்.
10. உழுது புழுதி பிரட்டிவிதை
உடனிதில் வித்திப் பரம்படிப்பார்.
பழுது வாரா ததனலே
பாங்காய்ப் பயிரும் முளைத்துவரும்.
11 முளைத்த பயிரி னூடெழுந்து
மூடுங் களையைப் பறித்தெறியக்

இளைத்து வளரும் பயிர்சுற்றிக்
இளரக் கீழ் ரமுங்காக்கும்.

12. விதைவிட் டதன்பின் மழையில்லா
விடினும் இருமா தம்தாங்கும்.
இதைவிட் டொருமண் டலத்தில்மழை
இருந்தா லிதன்சீர் வியப்பாமே.

13. இதமழை யால்மிகக் குளநிரம்பில்
எல்லாப் பயிரோ டிதுஞ்செழிக்கும்
மிதமாய்க் குளத்தில் ஜலம் வரினும்
மிகவும் லேசாய் விளைந்திடுமே.

14. கோடையு ளாத நிலமெல்லாம்
குளத்தில் தண்ணீர் நிறைந்ததன்பின்
சேடையில் உழுது தழைமிதித்து
செழுந்தொழி யாக்கி நடுவார்கள்.

15. நாற்றங் காலிற் பயிர்வளர
நாள்கள் கொஞ்சம் தாமதமாம்
மாற்றி யதன்பின் நடத்தேறி
வளர அதிக நாட்செல்லும்.

16. தாமத மிப்படி யானபயிர்
தண்ணீர் தட்டி னுல்கெட்டு
சாமத னுலே முன்கூட்டித்
தரிசை யுழுது வைத்திடுவீர்.

17. அண்ணு! அதுவும் உண்மைதான்
ஆனுல் உழுது காயந்தவயல்
மண்ணில் விதைப்புக் காம்பருவம்
வாய்க்கப் பின்மழை யிலையானுல்,

18. தண்ணீர் பாய்ச்சிச் சேருக்கித்
தாமத மின்றி நடுவார்கள்.
உண்மையி லப்படி நட்டபயிர்
உடன்வெக் கரித்து வெந்தழியும்.

19. விதைத்த பயிரில் இவ்விதமாம்
வெந்தழி வென்பது கேட்டதிலை
பதைத்த நடுகையி லுண்டென்று
பலருஞ் சொல்லக் கேட்டிலையோ?

20. தம்பி! வெயிலில் மிகக்காய்ந்து
சமைந்த மண்ணில் ஜலம்விட்டால்
வெம்பி நீறும் பயிருணவு
வெக்கரிக் கும்முடன் நடுபயிரை.

21. அய்யோ புழுதிக் காய்ச்சலினுல்
அழியு மெனச்சில ரபிப்பிராயம்
மெய்யோ பொய்யோ நானறியேன்
மெஸ்தர் சாம்ஸனைக் கேட்டறியும்.

J. DHARMARANGA RAJU.

தோட்டப் பருவங்கள்
GARDENING OPERATIONS

தோட்டக்கால் நிலங்களில் சில விடங்களில் பறல் கற்களும் கூழாங்கற்களும் கலந்திருக்கும். நிலத்தை உழும்போதும் மண்வெட்டிகொண்டு கொத்தும்போதும் இந்தக் கற்கள் மேலே வரும். தோட்டக்காரர்கள் இக்கற்களைப் பொறுக்கி வெளியே கொண்டுபோய்ப்போடுவது வழக்கம். அப்படி அவர்கள் செய்வது பிசகு. தோட்டநிலங்களில் கொஞ்சம் கூழாங்கற்கள் கலந்திருப்பது மிகவும் நல்லது. நிலத்தில் சரியானபடி காற்றோட்டமுண்டாகவும், நீர் வடிவு சரியாய் ஆகவும், கொஞ்சம் பனி பெய்தாலுங்கூட அந்தத் தண்ணீரைக் கிரஹித்து நிலத்தில் இறங்கச் செய்யவும், நிலத்திலிறங்கிய தண்ணீர் எளிதில் ஆவியாய்ப் போகாமல் காக்கவும் இந்தக்கற்கள் உதவுகின்றன. ஆகையால் பறல் கற்கள் உள்ள நிலத்திலிட்ட தோட்டப்பயிர்கள் மழைகாலத்திலும் அழுகிப்போகாமல் நல்ல ஸ்திதியிலிருக்கும். சிலநாட்களுக்கு நீர் பாய்ச்சாவிட்டாலும் கற்கள் அதன் உள்ளீரத்தைக் காத்துக் கொள்வதால் பயிர்கள் உடனே வாடித் தீய்ந்து போவதில்லை; இவ்விஷயத்தைக் கிருஷிகர் நன்றாய்க் கவனிக்கவேண்டும்.

இப்பொழுது தோட்டம் போடுவதில் செய்யவேண்டிய பருவங்களைப்பற்றிக் கவனிப்போம். சாதாரணமாகக் கீரைத்தோட்டம் போடும் ஆட்கள்கூட முதல் முதல் செய்யுங் காரியம் என்னவென்றால் நிலத்தை மழைபெய்த பின்னாவது தண்ணீர் பாய்ச்சியாவது சற்று உலரவிட்டு மண்வெட்டிகொண்டு முக்கால் அடி ஆழத்துக்கு நன்றாய்க் கொத்தி அதிலுள்ள புல் பூண்டு முதலியவைகளை எடுத்துவிட்டு மண்ணைக் காயவிடுவார்கள். இப்படி வெட்டிப்போட்ட மண்ணின்மேல் சிலநாட்களுக்கு ஒருவரையும் நடக்கவிடமாட்டார்கள். நடந்தால் மண் உரப்பாகிவிடும். பின் அதில் காற்றோட இடமிருக்காது. சிலநாட்களுக்குக் காய்ந்தபிற்பாடு நிலத்தை மறுபடியும் கொத்தி மண்ணை ஆறவிடுவார்கள், இரண்டு மூன்று நாட்கள் ஆறியபின் பாத்திகளைக்கட்டி அதில் போடவேண்டிய எருவைப்போட்டு அந்த எரு மண்ணில் சேரும்படியாய் மண் வெட்டிகொண்டு கொத்திக் கலந்து அதன்பின் விதை விதைத்துத் தண்ணீர் பாய்ச்சுவார்கள். விசாலமான தோட்டங்களுள்ள மற்ற விடங்களில் கொத்துவதற்குப் பதிலாய்க் கனத்த கலப்பைகளைக்கொண்டு நிலத்தை நாலைந்துதரம் உழுது போடுவார்கள். நிலத்தைக் கிளரும் எவ்விதப் பருவத்திலும் முக்கியமாய் உள்ள நோக்கம் என்னவெனில் பயிர்களுக்குவேண்டிய மண்ணுணவு பச்சையாயிருப்பதை வேகவைத்து பக்குவப்படுத்துவதுதான். அரிசியை உலையில் போட்டு வேகவைத்துப் பக்குவப்படுத்துவதுபோலவே, பச்சையாயிருக்கும் மண்ணுணவு ஈரமாயிருக்கும்போது அதில் காற்றும் வெயிலும் படுவதால் வெந்து பக்குவப்படுகிறது. கொஞ்ச ஆழத்துக்கு உழுதாலும் கொத்தினாலும் அவ்வளவு ஆழத்திலுள்ள பயிருணவுமட்டும் பக்குவமடையும். அதனால் பயிருக்கு வேண்டிய அவ்வளவு அதிகமான ஆகாரம் அதற்குக் கிடைக்காமல் போகும். ஆகையால் அதிக ஆழத்துக்கு மண்ணைக் கிளரவேண்டும். மேலும் அடிமண் மேல் வரும்படி செய்து அதில் சரியான அளவுக்குக் காற்றோடும்படி சில தினங்களுக்கு அப்படியே போட்டுவைக்கவேண்டும். இப்படி செய்தபின் மண்ணை மறுபடியும் கிளறிக் காற்றோடவிடவேண்டும். இதனால் களைகளும் மடிந்து போகும். மண்ணில் பயிரின் வேர்கள் சரியாய் இறங்கி ஆழத்திலுள்ள பயிருணவையும் ஈரத்தையும் கிரஹித்துக்கொள்ளக்கூடியதாகும். வேர்கள்

அதிக ஆழத்துக்குச் சென்றிருப்பதால் கடுவெயில் காய்ந்தால் அது வேர்களில் தாங்காமல் பயிர் பச்சையாயிருக்கும். அதற்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சவேண்டியதாயிருக்காது.

தோட்டம் போடுகிறவர்கள் நிலத்தைத் தரிசுபோட்டு வைத்திருந்து விதைக்குந் தருணத்தில் ஒன்று அல்லது இரண்டுதரம் உழுது அல்லது கொத்தி இரண்டு தினங்களுக்குள் விதைத்து முடிக்கும் வழக்கம் அனேக விடங்களில் இருந்து வருகிறது. கிருஷிகர் அப்படி பரபரப்பாய் இந்தப் பருவத்தை நடத்தினால் சரியானபடி பலனடையமாட்டார்கள். வெயில் காலத்திலேயே மண்ணை உழுது கிளறிப்போடவேண்டும். அப்படிச் செய்வதிலும் முக்கால் அடி ஆழத்துக்குக் குறையாமல் கிளறவேண்டும். உழுததுமுதல் ஒருமாதக் காலத்துக்குக் குறையாமல் மண் காற்றாடவேண்டும். அந்தக்காலத்துக்குள் மண்ணை அடிக்கடி கிளறவேண்டும். அப்படி செய்யாமல் ஒரு வாரத்துக்குள் உழுது விதைத்துவிட்டால் அந்த மண்ணிலுள்ள உணவு சரியானபடி பக்குவப்பட்டிருக்காது. மண்ணுணவு பக்குவப்பட அனேக நாட்கள் செல்லும். மண்ணை உழுவதும் கொத்திக் கிளறுவதும் அதில் விதைக்கும் விதைகள் புதைவதற்குத்தானென்று சில கிருஷிகர் நினைப்பதுண்டு. நிலத்தில் எருவிடுவதால்தான் பயிர்களுக்கு வேண்டிய உணவு கிடைப்பதாகவும் அவர்கள் நினைக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேயே நிலத்தை ஆழமாய் உழுதாலும் கொத்தினாலும் பயிர்கள் நன்றாய் உண்டாவதில்லை யென்று அனேக கிருஷிகர் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம் அப்படிச் சொல்லுகிறவர்கள் சிலவிடங்களில் மேட்டு நன்செய்களில் குழியெடுத்ததார்களில் பயிர் எப்படி யுண்டாகிறதென்று மட்டுங் கவனிப்பார்களானால் மறுபடியும் அந்த ஆட்சேபனையை ஒருகாலும் சொல்லமாட்டார்கள். குழியெடுத்திருக்கும் நிலத்துக்குத் தண்ணீர்த்தட்டு உண்டாகுமானால் மற்றவிடத்திலுள்ள பயிர் முற்றிலும் வாடி வதங்கிப்போக அந்தக் குழியெடுத்த விடத்தில்மட்டும் பயிர் பச்சையாயும் அதிக உயரமாயும் செழித்து வளர்ந்திருப்பதையுங் காணலாம். ஆகையால் அதிக ஆழமாய் நிலத்தைக் கிளறுவதில் அதிக உபயோக மிருக்கிறதென்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

ஆனால் ஒரு காரியம்மட்டும் கவனிக்கவேண்டும். தோட்டக்கால் நிலங்கள் அனேக வருஷங்களுக்கு எருவிட்டுப் பயிரிடப்பட்டுவருவதாலும் இதுவரையிலும் அவைகளை அதிக ஆழத்துக்கு உழவு செய்திருப்பதில்லையாகையாலும், அடிமண்ணைவிட மேல்மண் அதிக வளமுள்ளதாயிருக்கும். ஆழமாய் உழும்போது உரச்சத்து அதிகமில்லாத அடிமண் மேல்வந்து நிலத்தின் வளத்தைச் சிறிது குறைக்கும். ஆகையால் ஆழத்துக்கு நிலத்தைக்கிளறும் போதெல்லாம் அதிக எருவை உபயோகிக்கவேண்டும். இப்படி நேரிடும் அதிகச் செலவுக்கு இரட்டிப்பு அல்லது மூன்றுமடங்கு லாபம் அந்தப்பயிரில் கிடைக்கும். ஆகையால் அந்தச் செலவைப்பற்றி ஒருவரும் கவனிக்கக்கூடாது.

புத்தக வரவு

கமலாம்பாள் சரித்திரத்தின் நூலாசிரியரும், பிரபுத்த பாரதம் என்னும் மாதாந்தப் பத்திரிகையை ஆங்கிலபாஷையில் நடத்தி வந்தவருமான ஸ்ரீமான் பி. ஆர். ராஜம் அய்யர் பீ. ஏ. என்பவரின் சரித்திரத்தையும் அவர் செய்த நூல்களின் உபதேச மொழிகளையும் அவர் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய வேதாந்த வியாசத்தையும் சேர்த்து "ராஜம் அய்யர் சரிதை" என்று பெயரிட்டு மைலாப்பூர் மெஸாஸ் ஜெனரல் சப்ளைஸ் கம்பெனியார் அணா 8-க்கு விற்றுவருகிறார்கள். நமது சந்தாதாரர்கள் அப்புஸ்தகத்தை வாங்கி வாசித்து பயனடைவார்களென நம்புகிறோம். ப. ர.

வெள்வால் மலத்தின் உபயோகம்

THE USE OF BAT'S DUNG

பர்மாவில் ஷான் மாகாணங்களுக்கும் ஐராவதி நதி தீரத்துக்கும் இடையிலுள்ள மலைத்தொடர்களில் பலவிடங்களிலுள்ள குகைகளிலும மலைப்பிழவுகளிலும் நூற்றுக்கணக்கான அடி ஆழத்துக்கு வெளவால் மலம் சேர்ந்து அடைந்திருப்பதாயும் அதை அங்குள்ள கிருஷிகர் இப்போதுதான் உபயோகப்படுத்த முயன்று வருகிறார்களென்றும் அறிகிறோம். சிலவிடங்களில் இந்தக் குகைகள் அதிக உன்னதமான சிகரங்களுக்கருகிலிருப்பதால் அங்கே சேர்ந்திருக்கும் வெளவால் மலத்தை எடுத்துக்கொண்டு வருவது அதிகக் கஷ்டமென்று சொல்லுகிறார்கள். என்றாலும், கிருஷிகருக்கு இதன் முக்கிய உபயோகம் தெரிந்தால் இதை அதிகமாய் எடுத்துவந்து எருவாக உபயோகிப்பார்கள் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

கர்னூல் ஜில்லாவிலுள்ள பங்கனபல்லி ஜமீன்தாருக்குப் பக்கத்திலிருக்கும் நல்ல மலை சாகத்தில் சில கெவிகளில் வெளவால் மலம் அதிகமாய்ச் சேர்ந்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். கடப்பை கர்னூல் ஜில்லாவிலுள்ள கிருஷிகர்களுக்கு இந்த வெளவால் மலத்தின் விசேஷ உபயோகம் நன்றாய்த் தெரிந்து மலாம்பழப் பயிருக்கு வெளவால் மலத்தை எருவாய் உபயோகிக்கிறார்கள். அதனால் அந்தப் பழத்துக்கு விசேஷசுவை யுண்டாகிறது. அந்தவிதைகளைக் கொண்டுவந்து மற்ற விடங்களில் பயிர்செய்யும் போது அதற்குக் கடப்பை கர்னூல் ஜில்லாக்களிலுண்டாகும் பழத்தின் சுவையில்லாமற்போவதும் அதற்கு ஒரு காரணம். மற்றவிடங்களில் இந்த விசேஷ எரு அந்தப் பயிருக்கு போடப்படுவதில்லை. போட்டு பயிரிட்டவர்கள் ஏகதேசம் அந்தமாதிரி பழங்களை உண்டாக்கி யிருக்கிறார்கள்.

தற்காலத்தில் அநேக கோவில்களிலும் கோபுரங்களிலும் வெளவால்மலம் அதிகமாய்ச் சேர்ந்திருக்கிறது. வருஷாவருஷம் அதைக்கூட்டி எறிந்துவிடுகிறார்கள். நோய் மிகுந்த நெல்பயிருக்கும் மலாம்பழச் சாகுபடிக்கும் இதை உபயோகித்தால் கிருஷிகர் அதிகமான பலனை நிச்சயமாய் அடைவார்கள்.

குறிப்புகள்

NEWS AND NOTES

நிலத்திற்குள் 1000-அடி ஆழம் வரையிலும் பாதாளத் தண்ணீர் ஊற்று இருக்கிறதாவென்று கண்டுபிடிப்பதற்காக ஒரு இயந்திரம் இங்கிலாந்தில் உண்டாக்கியிருக்கிறார்கள். பூமியிலிருந்து ஆகாயத்துக்கு மின்சார சக்தி இடைவிடாமல் சென்றுகொண்டிருப்பதாயும் அந்தச் சக்தியானது பாதாள ஊற்றுகள் இருக்குமிடங்களில் அதிகமாயிருக்குமென்றும், மேலே சொன்ன இயந்திரத்தை நிலத்தின்மேல் ஓரிடத்தில் நிறுத்தினால் அந்த மின்சார சக்தியின் வலிமையை அந்த இயந்திரம் காட்டுகிறதென்றும், அதன் மூலமாய் அவ்விடத்தில பாதாள ஊற்று இருக்கிறதா இல்லையாவென்று அறிந்து கொள்ளலாமென்றும் தெரியவருகிறது. இந்த இயந்திரத்தை ஜில்லா விவசாய சங்கங்கள் வாங்கி வைத்துக்கொண்டால் தற்காலத்தில் செய்வதைப் போல் ஒவ்வோரிடத்திலும் குளாய்க் கிணறுகள் தோண்டிப் பார்க்கவேண்டிய அவசியமிருக்காது. இந்தச் செலவில்லாமலே ஒரு நிலத்தின் பற்பல விடங்களிலும் இந்தக் கருவியை நிறுத்திப் பார்த்து இரண்டுமணி நேரத்துக்குள் எந்தவிடத்தில் ஊற்று இருக்கிறதென்று கண்டுகொள்ளக்கூடும். இதன்பின் கிணறுவெட்டுவது மிகவும் சுலபமாகும்.

மார்கழிமாதத்திய பருவங்கள்

MONTH'S OPERATIONS

செங்கற்பட்டு ஜில்லா

திருவள்ளூர் தாலுகாவில் சில நாட்களுக்குமுன் பெய்தமழையினல் நெல்லும் வெள்ளைச்சோளமும் விதைக்கலாம். கேழ்வரகும் சாகுபடி செய்யலாம். ஜில்லா முழுவதிலும் அவுரி விதைக்க இது நல்லதருணம். நெல் தீய்ந்து போனதற்கு இந்தப் பயிராவது கைகூடுமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். சிலவிடங்களில் கொள் விதைக்கலாம்.

தென் ஆர்க்காடு ஜில்லா

இரவைக்கம்பும், புன்செய் சோளமும், அவுரியும், எள்ளும் விதைக்க இது தக்க காலம். சில விடங்களில் கரும்பும் இப்போதே நடலாம்.

தஞ்சாவூர் ஜில்லா

பட்டுக்கோட்டைத் தாலுகாவில் இப்போது எள் விதைக்கக்கூடிய காலம். மற்றவிடங்களில் கம்பும், மக்காச் சோளமும் சாகுபடி செய்யலாம்.

திருச்சினப்பள்ளி ஜில்லா

வடபாகத்தில் கடலையும், பருத்தியும் விதைத்து முடிவாகும். தென் பாகத்தில் கார்நெல்லும், கம்பும் சாகுபடிசெய்யலாம். இந்த மாதக்கடைசியில் அவுரி விதைக்கலாம்.

மதுரை ஜில்லா

வெள்ளைச்சோளம், கடலை, கொள்ளு, விதைப்பு முடிவாகும். புகையிலை, வெள்ளுள்ளி, மேல் பாகத்தில் சாகுபடி செய்யலாம். மத்திய பாகத்தில் சின்ன சம்பாநெல்விதைப்பாகும். கொடைக்கானல் தாலுகாவில் நெல்லும், கோதுமையும் விதைப்பாகும்

திருநெல்வேலி ஜில்லா

ஒட்டப்பிடாரம் சாத்தூர் தாலுகாக்களில் புன்செய்க் கம்பு விதைப்பு முடிவாகும். திருநெல்வேலி அம்பா சமுத்திரம் தாலுகாக்களில் இரவைச் சோளம் விதைப்பு ஆரம்பம். அம்பா சமுத்திரம் நாங்குநேரித் தாலுகாக்களில் புன்செய்ச் சோளம் விதைப்பாகும். சங்கரநயினர் கோவில் ஸ்ரீ வில்லிபுத்தூர், நாங்குநேரி தாலூகாக்களில் எள் விதைக்கலாம், தென்காசி தாலுகாவில் சிலவிடங்களில் இளநெல் தினுசுகள் விதைக்கலாம். புன்செயில் சோளம் விதைக்கவேண்டிய காலம் இதுமுதல்தான்.

சேலம் ஜில்லா

பாலகாட் பரமஹால் தாலுகாக்களில் நன்செயில் இளநெல்லும் புன்செயில் சோளமும் விதைக்கலாம். ஊத்தங்கரையில் இப்போது புகையிலை நடத்தக்க சமயம். நாமக்கல் தாலுகாவில் கேழ்வரகும் சாமையும் விதைத்து முடிவாகும்.

வட ஆர்க்காடு ஜில்லா

கங்குந்தி, பால்மனேர், புங்கனூரில் சோளம் விதைக்கலாம். சித்தூர் குடியாத்தம் தாலுகாக்களிலும், கார்வேடி நகரம் காளஹஸ்தி ஜமீன்களிலும் நெல் சாகுபடி செய்யலாம். நன்செயில் கேழ்வரகும், புன்செயில் சோளம் எள், அவுரியும் விதைக்க இது நல்ல காலம்.

கோயம்புத்தூர் ஜில்லா

பொள்ளாச்சி தாலூகாவில் கோதுமை விதைப்பு முடிவாகும். தாராபுரத்தில்நெல் சாகுபடி செய்வார்கள். உடுமலைப்பேட்டையில் வரகும் புகையிலையும் சாகுபடி செய்யலாம். பவானி, ஈரோடு தாலுகாக்களிலும் புகையிலை சாகுபடிக்கு இது நல்ல காலம்.

௳

விநாயக மான்மியம்

இந்நூல் உபபுராணங்களிற் சிறந்து தலைமைபெற்றுள்ள விநாயக புராணத்தைச் சுருக்கி நவரசங் கலந்த அகவற்பா நடையில் இயற்றப்பட்டுள்ளது. விருத்தப்பா நடையிலுள்ள விநாயகபுராணம் கற்றவருக்கன்றி ஏனையோருக்கு விளங்காக் கடினமானது; வசனநடையிலுள்ள புராணம் மிகவிரிவானது பற்றி வாசிப்பவர்கட்கு ஆயாசத்தை விளைவிக்கும் இயல்பினது; இந்நூலோ கரும்புவனத்தைத் திரட்டிச் சுருட்டி முறுக்கிப்பிழிந்த தட்டுவெல்லம் மாதிரி சுவைதருவது.

சைவசமயிகளானோர் எக்கருமத்தைச் செய்ய முயலும்போதும் ஆதியில் வழிபடுந்தெய்வம் விநாயகக் கடவுளே யாதலின் அப்பெருமானார் திவ்விய சரிதங்களடங்கிய இந்நூல் ஒவ்வொருவர் வசமும் இருக்கத்தக்க தவசியமே. விநாயகபூஜை விரதங்க ளநுட்டிப்பவர்கட்கு இதனினுஞ் சிறந்ததாய் வேண்டற்பாலது வேறொன்றில்லை. மூவரும், இந்திரன் முதலியதேவரும், ஆதிசேடன், அகத்தியர், காசிபர், இராவணன், வீமன், நளன், உருக்மாங்கதன் முதலிய அநேகரும் உபாசித்துப் பேறடைந்த சரிதங்களும், பிரமசிருட்டிப்பு, திரிபுரதகனம், சடாக்ஷர மகுத்துவம், காசிவிசேடம், சதுர்த்திவிரதம், அருகு வன்னி முதலியவற்றின் வரலாறுகளும், பன்னிரு திருவவதாரங்களும், பிறவும் யாவருக்கும் எளிதில் விளங்கும்படி சுத்தமா யச்சிட்டுள்ளது. புத்தகம் ஒன்றுக்கு கிரயம் ரூபா 1. வி. பி. சார்ஜ் அணா 4.

மில்டெரி இந்துபாக சாஸ்திரம்

மானிடஜென்மமெடுத்த நாம் எவ்வளவோபிரயாசமும் தேககஷ்டமுமெடுத்து சம்பாதிப்பது சாண்வயிற்றுக்காகவே. அவ்வயிற்றை நிரப்புவதை மனதிற்குத் திருப்தியாகும்படி புசித்துவந்தால் ஜீவநாள்வரையில் அழியாத தேகவல்லமை பெற்றிருக்கக்கூடும். அவ்வுணவுகளில் "மாம்ஸம் மாம்ஸத்தை விருத்திசெய்யும்" என்கிறபடி இப்பிரபஞ்சத்தில் பெரும்பாலார் மாம்ஸபக்ஷணிகளாயிருக்கின்றனர். அவர்கள் மாம்ஸத்தை நன்றாய்ச் சமையல் செய்துபுசிக்கும் பக்குவத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு அக்பர் பாட்சா, சிவாஜி, ஸரபோஜி மஹாராஜாக்களும் இன்னும் அநேக பிரபுக்களும் ஆவலோடு உருசியுடன் புசித்த அநேகமுறைகளும், மஹம்மதியர்களது சிலஅருமையான பாகங்களும், மாம்ஸபட்சணம் செய்யாதவர்கட்கு உபயோகமாகும்படி அரிசி, பருப்பு, ஜலம் இவற்றின் சுத்திகளும், மல்லிகைப்பூவாசனை அன்னம், வெங்காயத்தாளித அன்னம், மல்கோவாப் பழப்புலவு, பகாராபுலவு முதலிய சைவமுறைகளும், துவையல், ஊறுகாய் வகைகளும், பலகார வகைகளும், பாயஸம், சரபத்துவகைகளும் வசனநடையி லச்சிட்டுள்ளது. சற்று வாசிக்கத்தெரிந்த பெண்டுகள் முதல் ஒருவரைக்கேட்காமலே பாகங்களைச் செய்யலாம்.

விலை அணா 8. வி. பி. சார்ஜ் அணா 3.

விநோதவேடிக்கைக் கதாமஞ்சரி

எல்லாம் சிரிப்பு! எல்லாம் வேடிக்கை, வாங்கி வாசியுங்கள்.

இதை வாசிப்பவர்களும் கேட்பவர்களும் வயிறெல்லாம் புண்ணாகும்படி கீழே விழுந்துவிழுந்து சிரிப்பார்கள். படிக்கப்படிக்க மிக வேடிக்கையாயிருக்கும். இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பவர்கட்கே இதன் உண்மைவிளங்கும். விலை அணா 6, வி. பி. சார்ஜ் அணா 3.

க. பெ. நாராயணசாமி முதலியார், கமலநாயகி விலாஸ்,

நெ. 27, வைக்கோற்காரன் தெருவு, வேப்பேரி போஸ்ட், சென்னை.

உயர்ந்த நான்கு தங்கப் பதக்கங்களும் முதல்தரமான
அனேக யோக்கிதாபத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன.

ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி,

பண்டித டி. கோபாலாசார்யர், எ.வி.எஸ்.

அவர்களால் சாஸ்திர முறைப்படி நேரில் தயார் செய்யப்பட்ட
ஆயுர்வேத அவுஷதங்கள்.

1. கேசப்பிரசாதனதைலம்.--கூந்தலை விருத்தி செய்யத்தக்கது. நல்ல சுவாஸனையுள்ள தைலம். கண்களுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கக்கூடியது. ஒருபுட்டியின் விலை ரூ. 1—0—0.

2. அசோகவடி.— ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை செம்மையா யுண்டாகாதிருத்தலையும், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிக வெள்ளமாய்ப் போதலையும், வயிற்றுவலி, காலெரிவு முதலிய ஸ்திரீகளின் வியாதிகளைக் கண்டிப்பதில் அமிருத சஞ்சீவினிபோன்றது. புட்டி 1-க்கு விலை அணா. 12.

3. பிரமேக பஞ்ஜனி எனும் மதுமேக மூத்ரசங்காரி.—மதுமேகமென்னும் மூத்திரத்தையும், நெடுங்காலந் தொடங்கி மூத்திரமார்க்கத்திலிருந்து சரவிக்கும் சுக்ல நஷ்டம் முதலிய காரகங்களை நிவர்த்தி செய்யும். (புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0.)

4. ச்யவனப்பிராஸன.—உப்பஸம், க்ஷயம், சாதாரணமான இருமல், தொண்டை, ஸ்வாஸக்குழாய்களின் ஸம்பந்தமான எல்லாவிதமான துர்க்குணங்களுக்கும் அபூர்வமானது. காட்லீவர் எண்ணெயினுல் குணமாகாத வியாதிகளெல்லாவற்றையும் சௌக்கியப்படுத்தும். (டின் 1-க்கு விலை ரூபா 2—8—0.)

5. ரக்தசோதக.—கெட்ட இரத்தத்தைச் சுத்திசெய்யும், உடம்பிலிருக்கும் சொறி, சிரங்கு, மஞ்சகாமாலை, வாதத்திலுண்டாகும் வலி இவைகளை நிவர்த்திசெய்யும். (புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0.)

போஸ்டேஜ் பாகிங் முதலிய செலவு பிரத்தியேகம்.

N. B.—இன்னும் இதரபேடெண்டு சாஸ்த்ரீக மருந்துகளும் அவைகளின் காட்லாக்குகளும் கடிதமெழுதுவோர்க்கு இனமாயனுப்பப்படும்.

டெலிக்ராம் அட்ரஸ் "பண்டிட் மதிராஸ்."

☞ ஆயுர்வேதாச்சிரமம்,
55, ஆசாரப்பன் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.

P. SUBBA ROY'S

Wonderful Auyurvedic Medicines.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

தயவுசெய்து

இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

பி, சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

24. "இரக்ஷாமிர்தம்".—தாவரவர்க்கத்தைச்சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி தேயிலைக்குப்பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்க்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அரைக்குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலரா முதலிய காலங்களில் ஷை சூரணத்தின் கஷாயத்தைப் பாலுடன் அல்லது பாலைச்சேர்க்காமல் சமயத்திற்குத் தக்கபடி உபயோகி ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவதுமன்றி நோய்வராமல் கார்க்கும். பித்தவாயு, காசம், க்ஷயம், அஜீர்ணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளைப்போக்கும். இரத்தத்தைச் சுத்திசெய்து தாதுவிர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களுக்கும், மது மூத்திரம், அதி மூத்திர ரோகிகளுக்கும் அருமையான வஸ்து. இதை வழக்கமாய் உபயோகித்துவந்தால் மது மூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும், நீரின் அளவையும் குறைத்து மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தைச் சாந்திசெய்யும். மூளையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் பகைக்கத்தக்க குணமுள்ள காபி தேயிலையைவிட்டு விட்டு இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6, வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகம்.

25. "சர்பத்துகள்".—தாமரைபுஷ்பம், திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜாபுஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், கிச்சிலிப்பழம், பாதம், மாதளம்பழம், அன்னாசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தம்பழம், இஞ்சி சர்ப்பத்துகள், ஷை சர்ப்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒருசேர் குளிர்ந்த ஜலத்திலாவது சோடாவாடரிலாவது சுமார் 5-துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும் எந்தப் பழசர்பத்து உபயோகிக்கப்பட்டதோ அந்தப்பழத்தின் மதுரமான வாசனையோடுங்கூடிய சர்பத்தாகும். ½ அவுன்ஸ் சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடாவாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவுகள் 1-முதல் 3-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

'தென்னிந்திய விவசாயம்'

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது.

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

	ரூ.	அ.	ப.
விவசாய விளக்கம்	1	4	0
தென்னை	1	0	0
கரும்பு	1	0	0
நெல்	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,

தென்னிந்திய விவசாயம்,

வண்ணாரப்பேட்டை, சென்னை.

The South Indian Mills Co., Ltd.
TINNEVELLY.

தென் இந்திய மில்ஸ் கம்பேனி (லிமிடெட்)

திருநெல்வேலி.

மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெறுமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெய் ஆகஸ்ட்டுமீ முதல் ஷெ கம்பெனியில் கிடைக்கும்.

THE COMPLETE LETTER WRITER

2nd Edition Revised and Enlarged

BY

Hari Charan Das

Price Re. 1. *(full cloth Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

It contains Chapters on :—1, Notes and general Information, 2. Private Correspondence, 3. Receipt forms, 4. Bill forms, 5. Municipal Office, 6. Post Office department, 7. Postal department, 8. Income tax Office, 9. Railway Office, 10. Police Office Correspondence 11. Enquiring about a missing article on the Tram-car, 12. Medical department, 13. Collector's Office Correspondence, 14. Correspondence with Attorneys, Vakils, Muktears etc., 15. Correspondence with Doctors, 16. Steamer Correspondence, 17. News paper Correspondence, 18. Commercial and Govt. Office Correspondence, 19. Miscellaneous Applications and forms, 20. Abbreviations and Daily Wages.

A copy of this book will dispense with the necessity of seeking the help of others for writing Letters, Applications, etc.

To be had of—**M. L. DAS CO.,**

122, Baitakkhana Road, Calcutta.

மிகவும் சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

இவை யாவராலும் புகழப்பெற்றது. அனேகம் பாடசாலைகளிலும் பாடப்புத்தகமாக உபயோகப்பட்டு வருகின்றன. மிகவும் சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ ராமாயண வினவிடை, 2-ம் பதிப்பு.—இதில் அநேக நூதன ரூ. அ. மான விஷயங்கள் ஒழுங்குப்படுத்திச சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனந்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம் இவைகளிலிருந்து எடுத்தெழுதிய சுருக்கமும் ராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியது. 226-பக்கங்கள் கொண்டது. ஸ்ரீ ராம பட்டாபிஷேக படத்துடன் 0 12

ஸ்ரீ மஹாபாரத வினவிடை, முதல்பாகம்.—இதில் ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்களடங்கியது. புதுப்பதிப்பு. இப்பதிப்பில் சிற்சில சீர்திருத்தங்களும் ஒழுங்குகளும் புதிதாகச் செய்யப்பட்டிருக்கிறது. பீடிகையில் சிற்சில பாகங்கள் புதிதாக ஸம்ஸ்கிருத பாரதத்திற்கு ஏற்ப மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் பர்வ ஆரம்பத்திலும் அவ்வவ்விடத்தில் வில்லிபுத்தூரார் எழுதியுள்ள காப்பு செய்யுளை அமைக்கப்பட்டிருக்கிறது. முடிவில் எழுதியுள்ள அனுபந்தத்தில் தமிழ்ப்பாரதத்திலுள்ள புதிய கதைகளைச் சுருக்கமாக எடுத்து எழுதப்பட்டிருக்கிறது. 0 12

ஆரியமத உபாக்கியானம், 3-ம் பதிப்பு.—உயர்ந்த தர்மங்களைத் தெளிவாய் எடுத்துக்காட்டும் 50-இனியகதைகள் கொண்டது. ஒவ்வோர் கதையும் நமது புராணங்களிலிருந்தே எடுத்து எழுதியது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதியை நன்கு விளக்குகிறது. 0 2

ஸ்ரீ மஹாபாரத வினவிடை, 2-ம் பாகம். இதில் பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய ஸௌப்திக, ஸ்திரீ பர்வங்களடங்கியது. மிகவும் இனிய நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசம் செய்யும் பாகம் மிகவும் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய புத்தகம் ஒவ்வோர் ஹிந்துக்கள் வீட்டிலும் அவசியமிருக்க வேண்டியது ... 0 12

குறிப்பு.—மேற்குறித்த புத்தகங்களைத் தவிர, இன்னும் எங்களிடம் அநேக விதமான தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்கும். கிரய ஜாப்தா வேண்டுவோர் $\frac{1}{2}$-அணா ஸ்டாம்பு அனுப்பினால் உடனே அனுப்பப்படும்.

1910-ம் வருஷத்திய

ஜோதிர்விலாச பாக்கெட் பஞ்சாங்க டைரி

இந்த டைரியானது சென்ற 3-வருஷகாலமாய்ப் பிரசுரம் செய்யப்பட்டுவருகிறது. இதில் யாவருக்கும் உபயோகமான அநேக அரிய விஷயங்கள் அச்சிட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. கல்விமான்கள் யாவராலும் நன்கு மதிக்கப்பெற்றது. வேண்டுவோர் உடனே ஆர்டர் செய்யவும்.

ஸாதா பைண்டு 0 4 0

பிளாப், பென்ஸிலுடன் 0 6 0

மேற்கண்ட புத்தகங்கள், ஜோதிர்விலாச பாக்கட் டைரி இவை வேண்டுவோர், கீழ்க்குறித்த விலாஸத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி,

மைலாப்பூர், மதராஸ்.

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பெயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி,

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 42. A. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க் கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது மான ஸ்காந்தமல்லாத (Non Magnetic) சர் தார் (Sirdar) லீவர் ரூபாய் 12, வெள்ளி 18.
Oxydised ரூ. 14.



நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க் கும்படியான கடியா ரம் மேல் சாவி யுள் ளது ஸ்காந்தமல்லாத **(Non Magnetic)** **(Lever)** லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

நெ. 101.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிஷ்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு	3 0 0
„ 1.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளது மான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்ட யம் ஸ்டாம்பு	5 0 0
„ 104.	வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள் சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளது மான ஹண்டிங் கெடியாரம்	12 8 0
„ 10.	வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும், 15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம்	16 0 0
„ 108.	வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல் சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் ½-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது	20 0 0

N. B.—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய கம்பெனியா ரால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன் னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக் கம்பெனியில் கிடைக்கும். கேட்லாக் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒரு வெல்வெட் பெட்டி ஒரு கண்ணாடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், கார ணடி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed by G. C. Loganadham Bros. at the Guardian Press, Mount Road, Madras.

Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . . AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1	சௌமியவருஷம் தைமூ 1உ	Part. 10
புத்தகம். 1	1909வருஷம் ஜனவரிமூ 14உ	பிரதி. 10

Contents

Lahore Industrial Conference 145
Foot & Mouth Disease ... 147
Seed Rate in Ragi Cultivation... 149
Seasons of Coimbatore District 151
Some Thoughts on Agricultural & Industrial Exhibitions & Cattle Shows ... 154
Sowing and Transplanting of Paddy, by M. R. Ry. Rao Bahadur J. Dharmaranga Raju Garu ... 157
The Month's Operations ... 159
News and Notes 160

பொருளடக்கம்

லாஹோர் கைத்தொழில் மஹாசங்கம் ... 145
கால்நோய வாயநோய ... 147
கேழ்வரகு சாகுபடியில் செல்லும் விதையின் அளவு 149
கோயம்புத்தூர் ஜில்லாவின் காலஸ்திதி ... 151
விவசாயக் கைத்தொழில் பொருட் காக்ஷிகளைப்பற்றியும் கால்நடைக்காக்ஷிகளைப்பற்றியும் சில குறிப்புகள் ... 154
நெல்விதைப்பும் நடுகையும் ம-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் ஜே. தர்மரங்கராஜு அவர்கள் 157
தைமாதத்திய பருவங்கள் 159
குறிப்புகள் ... 160

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12
Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by
J. R. RANGA RAJU,
5, Mount Road, Madras

[*All Rights reserved*]